விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 15 முஹற 5 இதழ் 229
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 1-10-84

## "இராணுவம் உடனடி வாபஸ் இல்லை"

### 'லலித்' தகவல்

(கொழும்பு)

''வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து இராணுவம் உடனடியாக வாபஸ் பெறப்படமாட்டாது'' என்று தேசிய பஸ்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து இராணுவம் வாபஸ் பெறப்படும் என்று 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகைக்கு ஜனாதிபதி பேட்டியளித்திருந்தமை தொடர்பாக அமைச்சரிடம் கேட்கப்பட்டபோது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளின் பாதுகாப்புக்கு விசேட பொலிஸ் கமாண்டோ படைகளை அமைத்து அப்படையினர் பயிற்சி பெற்றதும் இராணுவத்தினர் படிப்படியாக வெளியேற்றப்படுவார்கள். இந்த விசேட பொலிஸ் கமாண்டோ படையினர் இப்பகுதிகளைப் பாதுகாக்கும் முழுப் பயிற்சியும் பெறும் சமயத்தில் இராணுவத்தினரும் இப்பகுதியிலிருந்து முழுமையாக வெளியேறிவிடுவார்கள். ஆனால் இது ஓர் எளிதான காரிய

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் விவகாரம்:
## பார்த்தசாரதி—ஹமீத்
# 45 நிமிடம் பேச்சு

(நியூயோர்க்)

இந்திய வெளியுறவு அமைச்சின் பிரதம ஆலோசகரான திரு. ஜி பார்த்தசாரதி இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத்துடன் நியூயோக்கில்

(5-ம் பக்கம் பார்க்க)

★ சர்வகட்சி மாநாடு கருத்துக்கள்

# நகல்சட்டமூலம் நவ.15ல்
# ஜனாதிபதி சமர்ப்பிப்பார்!

## நேற்றைய கூட்டத்தில்
### கூட்டணி, காங்கிரஸ் கலந்துகொண்டன

(கொழும்பு)

**இலங்கையின் இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனாவினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளையும், சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றிய தூதுக் குழுக்களினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையும் உள்ளடக்கிய நகல் சட்டமூலம் நவம்பர் மாதம் 15ம் திகதி மீண்டும் நடைபெறும் சர்வகட்சி மாநாட்டின் நிறைவான கூட்டத்தில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்படும்.**

நேற்று மாநாட்டின் முடிவில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய மாநாட்டின் பேச்சாளர் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மேற்கண்ட விபரத்தைத் தெரிவித்தார்.

நேற்றைய சர்வகட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், மகா சங்கத்தின் உயர்பீடம், பௌத்த காங்கிரஸ், இலங்கை முஸ்லிம் மன்றம், அகில இலங்கை முஸ்லிம் லீக், இந்து சமய இயக்கங்களின் தாபனம், கிறிஸ்தவ சம

(5-ம் பக்கம் பார்க்க)

## மழை நாட்களில் பஸ் நிலையம்

(யாழ்ப்பாணம்)

மழைக் காலங்களில் யாழ். பஸ் நிலையத்தில் சுமார் இரு அடிக்கு வெள்ளம் தேங்கி நிற்பதால் பஸ் பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

பிரயாணிகள் பஸ்தரிப்புநிலையங்களுக்கு செல்ல முடியாமலும் பஸ் ஏற முடியாமலும் கஷ்டப்படுகின்றனர். (க)

## தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டம்!

(புலோலி)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வடமராட்சி மாணவர் ஒன்றியத்தினர் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தினை நேற்று ஆரம்பித்தனர்

நேற்று ஆரம்பித்த இந்த உண்ணாவிரதத்தில் 5 மாணவர்களும், 5 மாணவிகளும்கலந்து கொண்டனர். 3நாட்கள் இவர்கள் தொடர்ந்து உண்ணாவிரதமிருப்பர்.

இதன்பின் வேறு 10 மாணவர்கள் மூன்றுதினங்கள் இருப்பர். இவ்வாறு தொடர்ச்சியாகஉண்ணாவிரதமிருக்கமாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

புலோலி புனித சூசையப்பர் ஆலய முன்றலில் நேற்றுஆரம்பமான இந்த உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக பெற்றோரும்

(5-ம் பக்கம் பார்க்க)

## அந்த ஒலிபரப்பு மீண்டும் இயங்கியது

(யாழ்ப்பாணம்)

'தமிழ் ஈழ' ஒலிபரப்பு நேற்று மீண்டும் வானொலியில் மூன்று மொழிகளிலும் குறுக்கீடுகளின்றி மிகத் தெளிவாகக் கேட்டது

கடந்த சில வாரங்களாக இ. ஒலிபரப்பு இடைநிறுத்தி வைக்கப்பட்டதாகக்கூறப்பட்டது

நேற்றுக்காலை முதல் தமிழிலும், பின் ஆங்கிலத்திலும் தொடர்ந்து சிங்களத்திலும், ஒலிபரப்பாகியது.

ஆங்கிலத்தில் ஆணின் குரலும், பெண்ணின் குரலும் மாறி மாறி ஒலிபரப்பானது.

இடையிடையே விடுதலைப் பாடல்களும் ஒலிபரப்பப்பட்டது. (க)

## இரவு நேரத்தில் கடலுக்குச் செல்லவேண்டாம்:
### யாழ். கடற்றொழிலாளருக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்களை மறுஅறிவித்தல்வரை இரவில் தொழிலுக்குச் செல்லவேண்டாமென்று அறிவித்ததைத் தொடர்ந்து அவர்கள் கடந்த 3 தினங்களாக தொழிலுக்குச் செல்லவில்லை

இதனால் மீன் விலை அதிகரித்திருப்பதுடன் பெரும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

ஆயுதப்படையினர் இவர்களைத் தொழிக்குச் செல்ல வேண்டாமென்று ஒலிபெருக்கி மூலம் கேட்டுக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு நேற்று அறிவிக்கப்பட்டிருப்பதாக

(5ம் பக்கம் பார்க்க)

★ இருபது நாட்களுக்குப் பின்னர்

## யாழ்-கொழும்பு இரவு பஸ் சேவை ஆரம்பம்!

[கா. யோகநாதன்]

இருபது நாட்களுக்குப் பின்னர் நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஆரம்பமான இரவு பஸ் சேவையில் பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் உட்பட சுமார் 500 பேர் பயணமானார்கள்

வவனியாவில் இம்மாதம் 10ம் திகதி தனியார் பஸ் ஒன்றில் சென்ற பிரயாணிகள் 15 பேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதைத் தொடர்ந்து இரவு பஸ் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்திற்கும், கொழும்பிற்குமிடையில் பகல் பஸ் சேவை மட்டுமே நடைபெற்றுவந்தது.

வவனியாவில் நடந்த சம்பவத்துடன் தொடர்பான வி. ஐ பி. பஸ் சேவையினர் நேற்றிரவு இரு பஸ்களைக் கொழும்

(5ம் பக்கம் பார்க்க)

## வீதி வேலைநிறுத்தம்:
# வடக்கில் 300 பேர் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

பெருந்தெருக்கள் திணைக்களத்தின் பொறுப்பிலுள்ளவீதி வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளதால் சுமார் 300 நாட் சம்பளகாரர்கள் வடபகுதியில் பாதிப்படைந்துள்ளனர்!

பளை, பூநகரி, யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை டிப்போவின் கீழ் பணியாற்றும் நாட்சம்பளகாரரே பாதிப்படைந்துள்ளதாகக் கூறப்படுகிறது

இதேசமயம் இந்த நான்கு டிப்போக்களிலும கடமையாற்றும் மாதச் சம்பளகாரருக்கு மாதத்தில் 15 நாட்களாவது வேலை வழங்குமாறு அறிவிக்கப்

(5ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு வழமைக்குத் திரும்புகிறது!
### இன்றுமுதல் பாடசாலைகள் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவம் முகாமிட்டிருந்த பாடசாலைகள் இன்று முதல் வழக்கம்போல் நடைபெறும் என்று முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் நேற்று தெரிவித்தார்

கல்வி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட அரசாங்க அதிபர் பாடசாலைகள் நடப்ப

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். —கொழும்பு தொலைபேசி 'அவுட்'!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும்பு தொலைபேசிச் சேவை நேற்று முழுநாளும் இயங்கவில்லை.

நேரடித் தொலைபேசி சேவையும் நேற்று இயங்கவில்லை!

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு, K. K. S. றோட், சந்திக்கு அருகாமையில் 2½ பரப்புக் காணியும் கட்டிடமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 116, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 1932

7 ஸ்ரீ தொடர்பிலக்க Ford Cortina கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, ஆசீர்வாதம் ஒழுங்கை 19ம் இலக்க இல்லத்தில் பார்வையிட்டு உங்கள் விலை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். சிலிங்கோ லிமிட்டெட், 191, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். 2011

உயர்ந்த இன அல்சேசன் இரண்டுமாத நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு எஸ். இலங்கைநாதன், 25/3, ஒடைலேன், வண்ணார்பண்ணை. யாழ்ப்பாணம். 2012

சுன்னுகம் தெற்கில் வீடு கட்டுவதற்கு ஏற்ற 5 பரப்பு காணி ஒழுங்கைக்கரையில்விற்பனைக்குண்டு. பரப்பு 65000 ரூபா. கா.தம்பிராசா, சுன்னுகம் தெற்கு, சுன்னுகம். 2015

ஏழாலை மயிலங்காட்டில் புன்னலைக்கட்டுவன்-மல்லாகம் றோட்டு எல்லையுடன்ஒரு மைலுக்குள் 18 பரப்பு தோட்டக் காணியும், 5பரப்பு வீடுகட்டக் கூடிய காணியும் கிணற்றுடன் மொத்தமாகவும் துண்டுகளாகவும் உடன்விற்பனைக்குண்டு. பரப்பு ரூபா 30,000க்கு மேல் ஆகக்கூடிய கேள்வி மாத்திரம் பரிசீலிக்கப்படும். தொடர்பு: விளம்பர இல: 1999, C/o, ஈழநாடு. 1999

நல்ல இன அல்சேஷியன், பொம்மனேரியன் நாய்க்குட்டிகளும் 1½ வயதுடைய அல்சேஷியன் கடுவனும் விற்பனைக்குண்டு 29/17 தேவாலய ஒழுங்கை, ஓட்டுமடம் யாழ்ப்பாணம். 2036

84ஸ்ரீ 5428 யமகா 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: நா. துரைசிங்கம் விளையாட்டு அரங்கு வீதி, கல்வியங்காடு யாழ்ப்பாணம். 2031

## விற்பனைக்கு

ஈவினை அ. த. க. பாடசாலை கற்பகவிநாயகர் ஆலயம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை என்பவற்றுக்கு அருகாமையில், இருபக்கங்களும் ஒழுங்கையும், கிணறு, மின்சார வசதியும் உடைய 9 4/3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்கள்: செ.செல்வரத்தினம், ஆசிரியர், ''செல்வம்'' ஈவினை தெற்கு, சுன்னுகம். 2038

## தேவை

கிளிநொச்சி ஆஸ்பத்திரி ஒரு மைல் சுற்றுடலுக்குள் ஏறக்குறைய ஒரு ஏக்கர் நிலம் தேவை. தொடர்பு: 859 A காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2024

புதிய மருந்தகம் (பார்மஸி) ஒன்றிற்கு போதிய மருந்தக அனுபவமுள்ள பெண் விற்பனையாளர்கள் உடன்தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். தகைமைச் சான்றிதழ் பிரதிகளுடன் 05-10-84 ற்கு முன் விண்ணப்பிக்கவும்.
ஓட்டோஸ் பார்மஸி, 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் அல்லது மு.ஒப்பிலாமணி 556, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 2032

## தவறிவிட்டது

26-9-84-ல் யாழ்ப்பாணத்தில் ந.மகேந்திரனின் அடையாளஅட்டை இல572112144V பேசுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மா.சந்திரகாந்தன். மக்கள் வங்கி, சுன்னுகத்தில் ஒப்படைக்கவும். 2028

## வகுப்புக்கள்

FRENCH அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் இயங்கி வரும் ஸ்தாபனத்தின் எல்லாவித பரீட்சைகளுக்கும் தேவைகளுக்கும் French வகுப்புக்கள் French Typing, மொழிபெயர்ப்புக்களும் செய்து கொடுக்கப்படும். ALLIANCE FRANCAISE 130, 1ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். 2021

## வகுப்புக்கள்

6-ம்தர புகுமுகப் பரீட்சைக்கான இலவச வகுப்பு 1-10-1984ல் இருந்து பி. ப. 2-00—3-00 மணிவரை நடைபெறும். Modern Education Centre, Karaveddy. 1981

## பயிற்சிகள்

ரெலிவிசன், வீடியோடெக்றிப்பியறிங், Computer Programming எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங், Hotel management, French, German பயிற்சிகள் இரண்டு மாத செய்முறைப் பயிற்சி உட்பட நடைபெறுகின்றன. ஆரம்பம்: 05-10-84. Jaffna Technical Institute ஸ்ரான்லிவீதி (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம் 1974

## பின்முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

அல்வாய் தெற்கு பிற்காலம் நைஜீரியா கடுனல் வசித்த சண்முகநாதன் ஜெகதலப்பிரதாபன் என்பவரது மரணசாதனமில்லா சொத்து விடயத்தில்

இறந்தவர் சண்முகநாதன் ஜெகதலப் பிரதாபன் கைம்பெண் தங்கம்மா
அல்வாய் தெற்கு
மனுதார்

வழ. இல. மரணசாதன நியாயாதிக்கம் } 12 1/Testy

எதிர்

(1) மயில்வாகனம் மகேஸ்வரன்
(2) பெண் ஜெகதாம்பிகை இருவரும் அல்வாய் தெற்கு
எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின் முற்றுகும் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள எவரேனும் 1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23-ம் திகதியன்று முற்பகல் 9-30 மணிக்கு இம்மன்றின் முன்னர் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின் முற்றுகும் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்கள்.

1984-ம் ஆண்டு புரட்டாதி மீ 24-ம் திகதி.

நீதிமன்றின் கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராஜசிங்கம்
பதிவாளர்

வரைவு
மு. க. முத்துக்குமார்
மனுதாரின் சட்டத்தரணி. 2005

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்–இலங்கை பட்டப் படிப்புகளுக்குப் பதிவு செய்தல் 1985

1985ஆம் ஆண்டுக்கு முதுகலைமாணி, தத்துவகலாநிதி ஆகிய பட்டங்களுக்குப் பதிவு செய்துகொள்ள விரும்புந் தகைமை பெற்றவர்களிடமிருந்து 1984ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பாடங்கள் ஆய்வுத்துறை

1. பொருளியல்-
   - அ. பொது நிதியியல்
   - ஆ. அபிவிருத்திப் பொருளாதாரம்
   - இ. விவசாய அபிவிருத்தி
2. புவியியல்-
   - அ. நகரப்புவியியல்
   - ஆ. குடித்தொகைப் புவியியல்
   - இ. பொருளாதாரப் புவியியல்
   - ஈ. காலநிலையியல்
   - உ. நீரியல்
   - ஊ. பிரதேசத் திட்டமிடலும் அபிவிருத்தியும்
3. இந்து நாகரிகம்-
   - அ. இந்துசமயம்
   - ஆ. இந்து தத்துவம்
   - இ. இந்து இலக்கியம்
   - ஈ. இந்து நுண்கலைகள்.
4. வரலாறு-
   - அ. பண்டைய, இடைக்கால இலங்கை வரலாறு
   - ஆ. ஐரோப்பியர் காலத்திற்கு முற்பட்ட இந்திய - இலங்கைத் தொடர்புகள்
   - இ. பண்டைய இலங்கையின் தொல்பொருளியல்
5. தமிழ்-
   - அ. தமிழர் சமூக இலக்கிய வரலாறு
   - ஆ. தமிழில் இலக்கியக் கொள்கைகளும் திறனாய்வும்
   - இ. தமிழ் நாட்டாரியல் ஆய்வுகள்
   - ஈ. இலங்கைத் தமிழியல் ஆய்வுகள்
   - உ. மூலபாடத் திறனாய்வு
   - ஊ. தமிழரின் நாடகமும் பிற அவைக்காற்றுக் கலைகளும்
   - எ. தமிழரிடையே பண்பாடும் தொடர்பும்
   - ஏ. தமிழ் இலக்கண ஆய்வுகள்
6. சம்ஸ்கிருதம்-
   - அ. வேத இலக்கியம்
   - ஆ. ஆகமங்கள்
   - இ. இதிகாசங்களும் புராணங்களும்
   - ஈ. பிற்கால சம்ஸ்கிருத இலக்கியம்
   - உ. சம்ஸ்கிருத நாடகம்
   - ஊ. சம்ஸ்கிருத காவிய இயல்
   - எ. சம்ஸ்கிருத சாசன இயல்
7. மொழியியல்-
   - அ. பிரயோக மொழியியல்
   - ஆ. கிளை மொழியியல்
   - இ. சமூக மொழியியல்
8. கல்வி-
   - அ. கல்விக் கோட்பாடுகளும் தத்துவங்களும்
   - ஆ. கல்வி உளவியல்
   - இ. கல்வியில் வரலாற்று ஒப்பீட்டுநெறி
   - ஈ. கல்வி நிருவாகமும் முகாமையும்
   - உ. கற்பித்தல் தொடர்பான கலைத்திட்டவியலும் முறையியலும்
     1. தமிழ்
     2. உயிரியல்
     3. கணிதம்
     4. பௌதிக விஞ்ஞானமும்
     5. சமூக விஞ்ஞானப் பாடநெறிகளும்
   - ஊ. கல்வித் தொழில் நுட்பவியல்
   - எ. மூன்றும் நிலைக்கல்வி
   - ஏ. உள அளவீடு.

விவரணக்கொத்து உட்பட விண்ணப்பப் படிவங்களை, ''நிதியாளர், யாழ். பல்கலைக் கழகம்'' எனும் பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 25/-க்கான காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் நேரடியாகவோ, தபால் மூலமாக அனுப்பியோ உதவிப் பதிவாளர்/கல்வியிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். இத்துடன் முகவரி இடப்பட்டதும் ரூபா 5-80 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டதுமான 38X25 செ. மீ. அளவுள்ள தபால் உறையும் அனுப்பப்படல்வேண்டும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக் கழகம்,
இலங்கை.
27-10-84. (2035)

## நவராத்திரி விழா

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி சிவன் கோவிலில் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. எதிர்வரும் புதன்கிழமை சரஸ்வதிபூஜையும், மறுநாள் பிற்பகல் மானம்பூ உற்சவமும் நடைபெறவுள்ளது.

## விளம்பரம்

### மாநகர சபை யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாநகரசபையின் புத்தகம் கட்டுபவர் பதவிக்கும், தற்காலிக, நிரந்தர களஞ்சிய உதவியாளர், அனுப்பும் உதவியாளர் பதவிகளுக்கு நியமனம் பெறுவதற்கு காத்திருப்போர் பட்டியலில் பதிந்து வைப்பதற்கு மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணபிக்க விரும்புவோர் மாநகரசபையின் விளம்பரப் பலகையில் வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்துக்கமைய விண்ணப்பங்களை 15-10-84-ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கலாம்.

சி.வீ.கே. சிவஞானம்
ஆணையாளர்
மாநகரசபை யாழ்ப்பாணம்

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
28-9-84

2029


## லேத் இயக்குநர் தேவை

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள
லேத் இயக்குநர் (LATHEMAN) தேவை.
நேரில் வரவும்
தகுதிக்கேற்ற நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.
உடனே தொடர்பு கொள்ளவும்.

**சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்,**
நீர்வேலி.

(1937)

## I. C. M. A. (London) in MADRAS LONDON A/L

JAN / JUNE IN MADRAS

சென்னையில் ''பிறைட்டன் இன்ஸ்டிடியூட்'' 18, நுங்கம் பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை 34 தொலைபேசி: 87529 (சென்னை) என்னும் இடத்தில் மேற்கூறப்பட்ட இலண்டன் பரீட்சைகளுக்கு மாணவர்கள் கல்வி கற்கலாம். அத்தோடு சென்னையிலேயே பரீட்சையும் மேற்கொள்ளலாம்.

விபரங்களுக்கு: தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

திரு. பொ. அரியநாயகம்,
இலக்கம்: 6, மும்தாஸ் மகால் வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-6
போன்: 82633

2037

அமெரிக்கா ★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ இத்தாலி
போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!

**AIR-TRANSIT**

TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

# றீகன் - குரோமிக்கோ சந்திப்பு

## "பயனுள்ளவை" —றீகன்

## "திருப்தியில்லை" —குரோமிக்கோ

### "சோவியத்துடன் உடன்பாடு காணும் சந்தர்ப்பம் நழுவல்" — மொண்டேல்

வாஷிங்டன், செப். 30

சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. அந்ரே குரோமிக்கோவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பயனுள்ளனவாகவும், அமெரிக்காவுக்குச் சாதகமானவையாகவும் இருந்தன என்று அமெரிக்க அதிபர் திரு. றீகன் தெரிவித்துள்ளபோதிலும், அப்பேச்சுக்களில் தாம் திருப்தியடையவில்லை என்று சோவியத் அமைச்சர் திரு. அந்ரே குரோமிக்கோ கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சுமார் மூன்று மணி நேரம் வரை அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றீகன் சோவியத் வெளிவிவகார அமைச்சர் திரு. அந்ரே குரோமிக்கோவைச் சந்தித்து உரையாடினார். இச் சந்திப்பு வாஷிங்டனில் வெள்ளைமாளிகையில் இடம்பெற்றது.

#### வானொலியில் உரை

திரு. குரோமிக்கோவுடனான சந்திப்புக் குறித்து தமது வாராந்த வானொலித் தேர்தல் பிரசார உரையில் திரு. றெனல்ட் றீகன் முதல்தடவையாக நேற்றுக் கருத்து வெளியிட்டார். அப்போதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதிபர் றீகன் தொடர்ந்து கூறியதாவது: "சோவியத் வெளிவிவகார அமைச்சர் குரோமிக்கோவுடனான பேச்சுக்கள் பயனுள்ளவையாக இருந்தன.

சோவியத்துடனான உறவுகள் தொடர்பாக அமெரிக்கா கொண்டிருக்கும் நிலையை இச் சந்திப்பின்போது குரோமிக்கோவிடம் தெளிவாக விளக்க முடிந்தது.

#### அமைதிக்கு ஒத்துழைப்பு

ஆயுத பரிகரணம், அணு ஆயுத உற்பத்திக் குறைப்புக் குறித்த முக்கியமான விடயங்களை ஆராய அமெரிக்கா ஆயத்தமாக இருப்பதாக திரு குரோமிக்கோவிடம் தெரிவித்துள்ளேன். கூடவே அமைதிப் பேச்சுக்களில் அமெரிக்காவுடன் சோவியத் ஈடுபடவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளேன்.

திரு குரோமிக்கோ தாயகம் திருப்பியதும் அமெரிக்கா தெரிவித்த ஆலோசனைகளை அமுல்படுத்த முயற்சிப்பார் என்றே கருதுகிறேன். இவ் ஆலோசனைகளை சோவியத் உதாசீனம் செய்யுமானால் அமைதியை ஏற்படுத்துவது முடியாதகாரியமாகிவிடும்.

"அமெரிக்கா எவ்வகையிலும் கூடுதல் இராணுவ வலுப்பெற முயற்சிக்கவில்லை உங்களது அரசாங்கம் அமைதியை விரும்பினால் அதனை ஏற்படுத்த நாமும் தயாராகஇருக்கிறோம்" என்று திரு. குரோமிக்கோவிடம் கூறியதாக திரு. றீகன் தெரிவித்தார்.

#### ஆக்கபூர்வமான கருத்து இல்லை

அமெரிக்க சார்பில் எதுவித ஆக்கபூர்வமான கருத்துக்களும் றீகனுடனான பேச்சுக்களின்போது தம்மிடம் தெரிவிக்கப்படவில்லை என்று திரு. குரோமிக்கோ கூறினார். தற்காலிகமான ஒருஉரையாடலாக அச் சந்திப்பு அமைந்ததோடு, அமெரிக்காவின் உண்மையான கொள்கைகளை அறிந்துகொள்ளும் சந்தர்ப்பமாக அது அமையவில்லை என்று அவர் மேலும்கூறினார்.

அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. ஷுல்ஸையும், திரு. குரோமிக்கோ இரண்டாவது தடவையாக நேற்றுச் சந்தித்தார்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான திரு வோல்ட்டர் மொன்டேல், றீகன்—குரோமிக்கோ பேச்சுக்கள் தோல்வியடைந்துள்ளனஎன்று தெரிவித்திருப்பதுடன் திரு. றீகன் சோவியத்துடன் உடன்பாடு காணும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டார் என்று தெரிவித்தார். (கி)

## மாற்று இருதயப் பெண்ணுக்கு மகப்பேறு!

சந்தியாகோ, செப். 30

இருதய மாற்றுச் சிகிச்சைக்குள்ளான பெட்ஸி ஸ்மித் என்ற 2? வயதுப்பெண் ஒருவர் கடந்த வாரம் குழந்தையொன்றைப் பிரசவித்தார்.

மருத்துவ வட்டாரத் தகவல்களின்படி இப் பெண்ணே குழந்தையொன்றைப் பிரசவித்த முதலாவது இருதயமாற்றுச் சிகிச்சைக்குள்ளானபெண்என்று தெரிவிக்கப்பட்டது.

நான்கு வருடங்களுக்குமுன் இந்த இளம் பெண்ணுக்கு 23 வயதான இளைஞர் ஒருவரின் இருதயம் மாற்றுச் சத்திசிர கிச்சைமூலம் பொருத்தப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. [கி]

## ஐ. நா. வில் வெடிகுண்டுபுரளி!

ஐ. நா. செப்-30

ஐ. நா. ஸ்தாபன பொதுக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்இவ்வேளையில் நேற்று முன்தினம் திடீரென ஐ நா. கட்டடத்தில் வெடிகுண்டுப் புரளி யொன்று ஏற்பட்டது.

இதற்கு ஆப்கானிஸ்தான் பிரதிநிதியின் ஆசனத்தின் கீழ் மர்மமானமுறையில் ஒருபொருள் இருக்கக்காணப்பட்டதே காரணம்!

பாதுகாப்பு அதிகாரிகள் சுமார் 20நிமிடங்கள் வரை

[6-ம் பக்கம் பார்க்க]

## ★ சோவியத் அதிபர் பதவி விலகுவார்?

மாஸ்கோ, செப். 30

சோவியத் அதிபர் திரு. கொன்ஸ்ரைன்டின் சேர்நென்கோ சோவியத் அதிபர் பதவியிலிருந்தும் விலக விருப்பம் கொண்டுள்ளார் என்று மேற்கத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வருட இறுதியில் இடம்பெறவிருந்த சோவியத் கிரெம்ளின் உயர் ஆட்சிபீடத்தின் பொதுக்கூட்டம்அடுத்தமாதம் நடத்தப்படவுள்ளது.

எனவே இக் கூட்டத்தை ஒரு மாதம் முன்கூட்டியே வைக்க எடுத்துக்கொண்ட முடிவு சோவியத் ஆட்சிபீடத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்துமுகமாகவே மேற்கொள்ளப்பட்டதென்று தெரிவிக்கப்பட்டது.

சோவியத் அதிபர் திரு. சேர்நென்கோ கடந்த வாரம் தமது 73 வயதைப் பூர்த்தி செய்தார். தேகநிலை இடம் கொடாத காரணத்தினாலும் இளம் சந்ததியினருக்கு தலைமைப்பீடத்தில் போதியளவு சந்தர்ப்பமளிக்கும் வகையிலுமே திரு. சேர்நென்கோ தமது பதவியைத் துறக்க முன்வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (கி)

## 24-வது ஒலிம்பிக் விளையாட்டரங்கு சியோலில் திறக்கப்பட்டது!

### சோவியத் பிரதிநிதிகளும் வந்திருந்தனர்

சியோல், செப். 30

தென் கொரியாவில் சியோல் நகரில் 24வது 'ஒலிம்பிக்' பந்தயங்களுக்கான மாபெரும் விளையாட்டரங்கு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஒரு லட்சம் பார்வையாளர்கள் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்க்கக்கூடியவகையில் இங்கு ஆசன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இப்பெரும் அரங்கை அமைப்பதற்கு 60 கோடி டாலர்கள் செலவிடப்பட்டுள்ளன. இதன் நிர்மாண வேலைகள் கடந்த ஏழு ஆண்டுகளாக இடம் பெற்றன.

இவ் அரங்கின் திறப்பு விழா நிகழ்ச்சிகள் கோலாகலமாக நேற்று இடம்பெற்றன. தென் கொரிய ஜனாதிபதி திரு. சுண்டு ஹூவான் அரங்கைத் திறந்து வைத்தார். சர்வதேச ஒலிம்பிக் கமிட்டித் தலைவர் திரு. யுவான் அந்தனியோ சமராஞ் இவ் வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பல நாடுகளினதும் ஒலிம்பிக் கமிட்டி உறுப்பினர்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர். சோவியத் யூனியனின் ஒலிம்பிக் கமிட்டி உறுப்பினர்களும் இவ்வைபவத்தில் கலநது கொண்டது குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது.

சோவியத் பிரதிநிதிகள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டதையடுத்து 1988-ம ஆண்டு சியோலில் இடம்பெறவுள்ள 24வது சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளை சோவியத் பகிஷ்கரிக்க மாட்டாதென்றே ஒலிம்பிக்வட்டாரங்களில்எதிர்பார்க்கப்படுகின்றது. (கி)


UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1/1 மகாதமா காந்தி றேட்,
(சலுசலவுககு அனமையில)
யாழபபாணம்.
ரெலெகஸ - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழுமபு நகர அலுவலகம
அவுஸதிரேலியா கடடிடம
த.பெ 1917, 54 யோர்க வீதி, கொழுமபு :
ரெலெகஸ. - 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066



# ஹோம் பிஞன்ஸ் லிமிட்.

யாழ்ப்பாணம் / கொழும்பு

30-9-84 முதல் இரவு பஸ் சேவை

புறப்படும் இடம்: கன்ஞதிட்டி சந்தி; புறப்படும் நேரம்: மாலை 6-30 மணி

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பதிவுசெய்யுமிடங்கள்:

1. ஹோம் பிஞன்ஸ் லிமிட், கன்ஞதிட்டி; தொலைபேசி: 24310
2. நியூ லங்கா சேல்ஸ் சென்ரர் ஆஸ்பத்திரி வீதி, தொலைபேசி: 23596
3 நியூ ப்ரசீதா, ஆஸ்பத்திரி வீதி; தொலைபேசி: 22480
4. அன்னராஜா ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி. தொலைபேசி: 22608

கொழும்பில்:

1. ஹோம்பிஞன்ஸ் லிமிட் காலி வீதி, பம்பலப்பிட்டி: தொலைபேசி: 589190
2 டைமன் ஸ்ரோர்ஸ், வெள்ளவத்தை; தொலைபேசி: 82978

புறப்படும் நேரம்:

வெள்ளவத்தை ரொமேசல் பாங் 7-15 மணி
ஹோம் பிஞன்ஸ் லிமிட்., பம்பலப்பிட்டி 7-45

பிற்குறிப்பு: சூழ்நிலைக்கு ஏற்ப சேவையில் மாற்றங்கள் ஏற்படலாம்.

### மணிவாக்கு

'சிற்றின்பப் பற்றுள்ளமனம் எப்போதும் இனிப்பான பொருள்களையும் சுகபோகங்களையும் விழைகிறது. மனத்தின் அவ்வியல்பை அடக்க முயல்வோனுக்கு உணவுக்கட்டுப்பாடும் உபவாசமும் அவசியமாகின்றன.

— மகாத்மாகாந்தி

## நமதுநோக்கு

# இஸ்ரேலின் இன்றைய ஆட்சி நிலை

மேற்குஆசியாவிலும், இன்று இந்துசமுத்திரப் பிரதேசத்திலும், அரசியல் நிலைமையைக் குலுக்கிவைக்கும் பெருந் திறமையுடைய சின்னஞ்சிறிய நாடு இஸ்ரேல்.

யாழ்ப்பாணம் என்ற வறண்ட பிரதேசத்தை நன்ருகச் செழிப்படைந்த நாடாக்க முடியுமென்ற நம்பிக்கைக்கு இதுபோன்ற சின்ன நாடு இஸ்ரேலை, இங்கு செல்வாக்குப்பெற்ற அரசியல் கட்சிகள் எடுத்துக்காட்டாக மேடைப் பேச்சில் கூறியகாலம் ஒன்றிருந்தது.

அரசியல் காற்று மாற்றம், அத்துடன் இந் நாட்டில் நடைபெறும் 'யுத்த' பரீட்சைகள், இன்று 'இஸ்ரேல்' என்ற நாமத்தையே ஒரு பரபரப்பாக மாற்றிவிட்டது.

இஸ்ரேலின் ''மொசாட்'' படையினர் இந் நாட்டின் காவற்படைக்குப் பயிற்சியளிக்கும் செய்தி, முதல் மூடுமந்திரமாக ஆரம்பித்து இன்று சர்வதேச முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

இந்த நாட்டில் வாழும் மக்கள் பல இனத்தவர்கள் மட்டுமல்ல, அண்டை நாடாகிய இந்தியாவும் இதனை எதிர்க்கின்றன; இதனால் நாம் நினைக்கமுடியாத அனர்த்தங்கள் நாட்டுக்கு மட்டுமல்ல இப் பிரதேசத்துக்கே நிகழலாமென்று அஞ்சுகின்றன.

இத்தகைய -நாடு அமெரிக்காவின் கண்டுபிடிப்பென்று கொள்ளப்படும் நாடு தன்னுடைய 36 வருட சுதந்திர வாழ்வில் ஒரு பெரும்பான்மை கொண்ட பாராளுமன்ற ஆட்சியைக் கண்டிருக்கவில்லை. இது ஒரு விநோதமான அம்சம்.

பொதுத்தேர்தலில் விகிதாசாரஅடிப்படையை அநுட்டிக்கும் முறை எந்த ஒரு பொதுசன அபிப்பிராய நுணுக்கத்துக்கும் இடமளிக்கின்றது.

ஆரம்பகாலத்தில் பிரதமர்களின் ஆளுந்திறமும், ஆளுமையுமே ஆட்சிக்குப் பலமளித்தது. பெண் பிரதமர் கோல்டாமேயர், திரு பென்குறியன் – இவர்களின் ஆட்சியில் பாராளுமன்ற ஸ்திரம் இல்லாதபோதும் நாட்டின் செல்வாக்கைப் பெற்ற தலைவர்கள் இவர்கள் என்ற காரணத்தால் தளப்பமற்ற ஆட்சி தொடர்ந்தது.

'ஸயனிசம்' என்ற ஆவேச கோஷத்தில் நாடு தீவிரங் கொண்டபடியால் உள்நாட்டு விவகாரங்கள் கொள்கையளவில் தாக்கமேற்படுத்த முடியவில்லை. 29 வருடம் நாட்டை ஆண்ட தொழிற் கட்சி 1977ல் தோல்வியடைந்ததென்றால், அந்த நீண்டகாலம் கட்சி பலமுற்றிருந்ததென்பதுஅர்த்தமல்ல: எந்த ஆட்சியிலும் வெளிநாட்டு விவகாரங்களில் தீவிரமும் போர்க் கோலமும் தாண்டவமாடிற்று.

தொழில்கட்சியில் தானும் இது பெருமளவிற்கு காணப்பட்டது; அமெரிக்காவை விட நம்பிக்கையுடைய நண்பர்கள் தமக்கில்லையென்றும், மத்திய கிழக்கில் தாம் தலை நிமிர்ந்து வாழவேண்டுமானால் அமெரிக்க ஆசியுடன் எவரையும் எதிர்க்கலாம், எதிர்க்க வேண்டுமென்ற தீவிரமும் தழைத்து வந்தது. தனது உலக ஆதிக்கத்துக்கு இஸ்ரேல்ஒரு ஏவற்காரனென்ற கோதாவில் அமெரிக்கா எந்த நெருக்கடியிலும் அதற்கு நியாயமற்ற முறையில் உதவிவந்ததை உலகறியும்.

அரபுநாடுகளுடன் நடந்த யுத்தங்கள் சிலவற்றில் இஸ்ரேல் அபரிமிதமான வெற்றிகள் ஈட்டியது; இதனால் விளைந்த செருக்கு அதன் தலைக்கேறியதை யார் தடுப்பார்?

தீவிரத்தில் தீவிரமென வர்ணிக்கப்படும் இன்று ஆட்சியிலிருந்து மண்கவ்விய திரு ஷாமிரின் தலைமை நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கி விட்டதோடு, இஸ்ரேல் மத்திய கிழக்கின் 'அடங்காப்பிடாரி' யென்ற பட்டத்தையும் பெற்றுக் கொடுத்தது.

இன்றைய பொதுத் தேர்தலில் தொழிற் கட்சி வெற்றி பெறுமென்று எதிர்பார்த்த போதும், 120 அங்கத்தவர் கொண்ட பாராளுமன்றத்தில் 46இடங்களையே பெற்றது. திரு ஷாமிரின் லிக்கட்கட்சி42 ஆசனங்களைப் பெறமுடிந்தது வியப்பாகும்.

தேர்தல் முடிவு வெளியாகி ஏழுவாரங்கள் தில்லுமுல்லுப்பட்டு இன்று ஒன்பது கட்சி கொண்ட கூட்டு முன்னணி அரசு நிறுவப்பட்டிருக்கிறது.

அவற்றின் ஒப்பந்தம் யாழ்ப்பாணக் கோவில்கள் சிலவற்றின்பூசை முகாமைத்துவத்துக்கு நிகரானது.

தொழிற்கட்சித் தலைவர் திரு பேரெஸ் 25 மாதங்களுக்குப் பிரதமராகவும், திரு ஷாமிர் அககாலத்தில் வெளிநாட்டமைச்சராகவும் கடமையாற்றுவர்; அதற்குப் பின் அவர்கள் இடம் மாறுவார்களென்பது ஒப்பந்தத்தின் முக்கிய முடிவு.

இஸ்ரேலின் விவாகரத்துச் சட்டங்கள் மிகக் கடினமானவை; ஆனால் அரசியல் திருமணத்துக்கு அவை பொருத்தமானவையா? இருந்து பார்ப்போம்.

பணவீக்கம் 400 சதம்' எனவே பிரதமரின் உடனடி நடவடிக்கை நாட்டுக்குயிர் கொடுக்கும் வாஷிங்டன் பயணம் என்பது வெளிப்படை.

# "ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் ஆலோசனை சற்றும் திருப்தியற்றது"

**[செப்டம்பர் 26, 1984 (சென்னை) 'இந்து'ப் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கத்தின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.]**

1983ல் நடந்த இனக் கொலையென்று சொல்லுமளவிற்கு இடம்பெற்ற பெருத்த நெருக்கடியில் இலங்கை வாழ் தமிழ்மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகினர். பாதுகாப்பின்மை, பதற்றம், பேரச்சம் என்ற இடர்கள் இடைக்கிடை ஒருசமாதான தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கை உணர்வுடன் மாறி மாறி மக்களை பருந்தாட்டமாட்டின.

தமிழர் பிரச்னை அரசியல் ரீதியில் தீர்க்கப்படலாமென்ற அடிப்படை நோக்கம் இருப்பதானால் அது ஒரு ஒற்றுமைப்பட்ட தேசத்தில் செயற்படும் ஆட்சி முறையிலென்பது தெரிவாகின்றது; ஆனால் இந்த முடிவுக்கு இருகாரியங்கள் மாருகச் செயற்பட்டுள்ளன; ஒன்று: குழப்பம் நிலவும் வடபகுதி மாநிலத்தில் உண்மையில் எழுந்திருக்கும் அரசியல் சவாலுக்கு கொழும்பில் கொலுவிருக்கும் அரசு ஒரு ராணுவ தீர்வுகாணமுடியுமென்று தவருக எண்ணி எடுக்கும் எத்தனம். சுமார் 15,000 வீரர் கொண்ட இலங்கை ராணுவம் இன்று தெறிகெட்டு காடைத்தனத்திலும், ஆயுதந்தாங்கிய இளைஞர்களை முறியடிக்க முடியாத பட்சத்தில் ஏழைப் பொதுமக்களைக் கொன்றும் தனது பலத்தை விரயமாக்குகின்றது; செப்டம்பர் 11ல் நடுநிசி கடந்த இராக் காலத்தில் வவனியாவில் பஸ் பிரயாணிகள் படுகொலைக்காளானதும்; இஸ்ரேல் உதவிய பயிற்சியாளர்; முன்னாள் எஸ். ஏ. எஸ் கூலிப்படையினர் போன்ற இறக்குமதிப் படைகள் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் முயற்சிகளில் ஏற்படக்கூடிய அபாய திருப்பங்களும் இதனை நன்கு விளக்குகின்றன. தங்களை 'விடுதலைப்புலிகள்' என்று பெயரிட்டு சதிப்புரட்சி முறையில் அமைந்த ஆயுதந்தாங்கிய தமிழ் இளைஞர்கள் காவற்படையினரில் நடத்தும் இரகசியத் தாக்குதல்கள் பகைமையைப் பச்சையாகவைத்திருக்க முயல்கின்றன.

அரசியல்தீர்வுக்கு முட்டுக்கட்டையாக விருக்கும் இரண்டாவது காரியம்; ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் அவநம்பிக்கை ஊட்டும் உறுதியற்ற கொள்கை நிலை, பேச்சு வார்த்தைகளின் பலனை நிராகரிக்க இதுவே முக்கிய காரணமென்பது அகில கட்சி மாநாட்டில் 'அனுபந்தம்சீக்கு நேர்ந்தகதி சான்ருகும். இந்திய அரசும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் கொண்ட ஏமாற்றம் இதனைப்பொறுத்ததே.

தமிழ் மக்களுக்கு கணிசமான முறையில் ஆளும் அதிகாரம் அளிக்க வேண்டுமென்று ஆரம்ப நிலையில் விருப்பம்காட்டிய திரு. ஜெயவர்த்தன, தெரிவு செய்யப்பட்ட பிரதிகள் கொண்ட மாகாணசபைகள்மூலம் இதனைப் பூர்த்தி செய்ய சித்தமுடையவராகக் காணப்பட்டார்; இந்த ஆலோசனை-மாகாணசபை- பிரதான எதிர்க்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயக்கா வாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டது; இன்று இதற்கு முற்றிலும் மாருக மிகக்குறைந்தஅளவில், ஒற்றுமைப்பட்ட இலங்கையை உருவாக்க சற்றும் உதவாத ஆலோசனையை சர்வகட்சி மாநாட்டில் வெளியிட்டிருக்கிருர். இதனை ஏமாற்றமென்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு ஏ.அமிர்தலிங்கம் கூறுவதில் என்ன வியப்பு?

இலங்கை அரசியல் வரலாற்றில் அதன் சுதந்திர ஒற்றுமைப்பட்ட வாழ்வு ஒரு பெரும் நெருக்கடியை நாடி நிற்கின்றது. ஆங்கு வாழும் இரண்டு அல்லது மூன்று-சிங்கள தமிழ் மக்களைக் கொண்ட-பிரதான சமூகங்கள் ஒற்றுமைப்பட்டு, சமத்துவ ஜனநாயக பங்காளர்களாக தங்கள் ஒரே நாட்டின் வருங்காலத்தின் வளர்ச்சிக்கு விருத்தி செய்யும் ஆற்றல் உடையவர்களா என்பதைச் சோதிக்கும் கால கட்டம் இது.

உணர்ச்சிவசப்பட்டு, பொறுமையிழந்து, பொதுமக்களுக்கு ஆவேசம் ஊட்டி, போட்டி போட்டு, யாருக்கு வெற்றியென்ற வீம்பில் ஈடுபடுவதற்கு இன்றைய 'வாழ்வா சாவா' என்ற பிரச்னைகள் இடங்கொடா.

எந்தத்தீர்விலும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இரு பகுதியினருக்கும் தவிர்க்க முடியாத முக்கிய பண்பென்பதை வற்புறுத்த வேண்டியதில்லை. எந்த அமைப்பிலும் நெளிவு சுழிவுகள் இடம்பெறும். நடைமுறையில் இவற்றை எவ்வகையில் நிமிர்த்தலாமென்பதை சர்வகட்சி மாநாடு போன்ற பொது மன்றம் தீர ஆராய்ந்து முடிவு கட்டலாம்; ஆனால் சமஷ்டி அமைப்பு ஏற்றுக் கொள்ளாத நிலையில் அதன் சிறந்த அம்சங்கள் மூலம் நியாயமான சுயநிர்ணயம் அளிக்க வேண்டிய நிபந்தனை தமிழர் பிரச்னைக்கு உறுதியான தீர்வுக்கு வழிகாட்டும்; இதற்குக் குறைந்த எதனையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வாரென்று நினைப்பது பகற்கனவாகும்; இதற்காகவே திரு. ஜெயவர்த்தன 1983 இறுதியில் இந்தியாவுடன் கலந்து ஆலோசனை நடத்திய பேச்சுக்கள் பரந்த போக்கில் அனுபந்த சீ [C]யை உருவாக்கின.

அனுபந்தம் சீ யின் உள்ளுடன் 'பிரதேச சபைகள்' என்பதே. பொதுஜன அபிப்பிராயம் (referendum) போன்ற சறுக்கல் கட்டை எதுவுமின்றி வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திச் சபைகள் இணைவது அதன் தாற்பரியம்; இதற்கு அன்று உடன்பாடு தெரிவித்த ஜெயவர்த்தன, இன்று இதற்கு வேண்டிய நியா

(5-ம் பக்கம் பார்க்க)

## வெள்ளைக் கமலத் தெய்வம்

வெள்ளைக் கமலம் மேவுந் தெய்வம்
வீணை யொன்றுடன் விளங்குந் தெய்வம்
அள்ளுங் கலைவடி வான தெய்வம்
அறிஞ ருளம்நட மாடுந் தெய்வம்.

கவிஞர் போற்றுங் காவியத் தேவி
கல்விக் கரசி கலைஞர் தேவி
குவலயத் தேவி கன்னித் தமிழில்
கதைகள் கூறுங் கற்பனைத் தேவி.

வீடு தோறும் விழா வெடுப்போம்
வாணி பாதம் பாடித் துதிப்போம்
ஏடு தொடங்க இரந்து கேட்போம்
எல்லோரு மாக எழுதிக் கற்போம்.

— மணிமன்றன்

## வெண்மைக் கமலத்து வித்தகி

வெண்மைக் கமலத்து வீற்றிருக்கும் வித்தகியே
கண்போற் கலைச்செல்வம் காத்தருள்வாய்
— தண்மதியே
எண்ணும் எழுத்தும் எழிற்கலையும் எம்மிடத்தே
வண்ணமுற வைப்பாய் விரைந்து.

— தா.தேவமதுரம்

## மக்கள் கருத்து

### சங்கங்களில் இடம்பெறும் கொள்ளைகள்

கொள்ளைகள் தொடருமானால் வடபகுதி சங்கங்கள் மூடப்படல் வேண்டும் என்று ஓர் சங்கத்தின் தலைவர் பத்திரிகையில் அறிக்கைவிடுத்தார். கொள்ளைகளையும் விடகூடுதலான நட்டங்களின் நிமித்தம் இதுவரை யாழ். மாவட்டத்தில் எந்த ஒரு கூ. சங்கமும் மூடப்படவில்லை. அதனால் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதைஎவரும் மறுப்பதற்கில்லை. ஆனால் இதைவிட பொதுமக்களுக்கு தெரியாத வெளிப்படாத 'கொள்ளைகள்' சங்கங்களில் இடம்பெறுவதை யார் அறிவார்? இந்த நட்டங்களை எந்தமுறையில் தடுக்கலாம். நான் இங்கே குறிப்பிடுவது நிர்வாக திறமையின்மையால் ஏற்படும் நட்டங்கள் தொடர்ச்சியாக வருடாந்த எண்பார்வை அறிக்கையில் வந்து கொண்டிருக்கின்றது இதனையும் சங்கங்களின் பொதுச் சபை உறுப்பினர்கள் ஆண்டு தோறும்ஏற்றுக்கொண்டுதான் வருகின்ருர்கள். நான் அறிந்த வகையில் எந்தஒருசங்கமாவது ஆண்டு எண்பார்வை அறிக்கையில் நட்டங்கள் ஏற்பட்டதற்காக ஒரு பணிப்பாளர் சபையையும் பொதுச்சபையல் தூக்கி எறியவில்லை. அத்துடன் சம்பந்தப்பட்ட பணியாளர் சபையினரிடம் இருந்தும் நட்டப்பணத்தை அறவிடவேண்டும் என்று தீர்மானிக்கவில்லை. சில இடங்களில் நட்டங்கள் வீண் உதாசீனச் செலவுகள் ஏற்படுத்த காரணமாய் இருந்தவர்களே மீண்டும் பொதுச்சபையின் தூயவாக்குக்களினல் தெரிவு செய்யப்படுகின்ருர்கள். ஆகையால் இப்படியான நட்டங்களையும் சேர்த்து பல.நோ.கூ. சங்கங்கள் கணக்கிடுதல் நலம். நான் கூறியகருத்திற்கு மாருன சங்கங்களும் இருக்கலாம். எப்படியாயினும் நிர்வாக திறமையின்மையால் ஏற்படும் நட்டங்களும் சங்கத்தை பாதிக்கின்றன. இதனை யார் தடுப்பார்கள்?

**எஸ். கே. ரி.**

சுன்னுகம்.

# ஐ. நா.வின் விவசாய நிறுவனம் வெளியிட்ட பனைபற்றிய நூல்!

## தமிழிலும் மொழிபெயர்க்கப்படும்

(கொழும்புத்துறை)

ஐ. நா. சபையின் உலக உணவு விவசாய நிறுவனமான எப். ஏ. ஓ. பனைவள அபிவிருத்தி பற்றிய தகவல்களைக் கொண்ட நூலொன்றை ஆங்கில மொழியில் வெளியிட்டுள்ளது.

சர்வதேச ரீதியிலான பனைப் பரம்பல், பனைவள அபிவிருத்தி, பனைத் தொழில்துறை, ஆய்வுகள், புள்ளி விபரங்களை விரிவானமுறையில் கொண்டுள்ள இந்நூல் ஐ. நா. உலக உணவு விவசாய நிறுவனத்தின் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ள ரோமில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை இலங்கைப் பனை அபிவிருத்திச்சபை மேற்கொண்டுள்ளதென்று சபைத் தலைவர் திரு. கே. நடராசா தெரிவித்தார்.

## ரூபவாஹினி

### இவ்வாரத் தமிழ் நிகழ்ச்சிகள்

1 ம் திகதி திங்கட்கிழமை
மாலை
7-15 கலையரங்கம் 'சக்தி' நாட்டிய நாடகம் நாட்டிய கலாமந்திர்

2 ம் திகதி செவ்வாய்க்கிழமை
மாலை
6-30 நம்நாட்டுத் திரைப் படத் தொடர் ''நங்கூரம்''

3 ம் திகதி புதன்கிழமை
மாலை
5-30 இது உங்கள் நாடு (நுவரேலியா)

5 ம் திகதி வெள்ளிக்கிழமை
மாலை
6-00 விளையாட்டுப்பயிற்சி (தமிழில் உரையுடன்)

### இன்று

மாலை
5-30 நாட்டுவளம்
5-35 வூடி வூட் பெக்கர் அன்ட் பிரென்ட்ஸ் சிறுவர் சித்திரம் [ஆங்கிலம்]
6-00 சிறுவர் நிகழ்ச்சி [சிங்களம்]
6-35 'ஊரும் உலகும்' சஞ்சிகை நிகழ்ச்சி [தமிழ்]
6-55 செய்திகள் [தமிழ்]
7-15 கலை அரங்கம் 'சக்தி' நாட்டிய நாடகம்
7-45 ரேகா நாடகம் [சிங்களம்]
8-15 செய்திகள் [சிங்களம்]
8-35 சின மக்கள் குடியரசு தின விசேட நிகழ்ச்சி
8-55 ''யெஸ்மினிஸ்டர்''
9-30 செய்திகள் (ஆங்கிலம்) நகைச்சுவை சித்திரம் [ஆங்கிலம்]
10-00 சர்வதேச பெண்கள கரப்பந்தாட்டம் ஜப்பான் எதிர் அமெரிக்கா
10-30 உலகச் செய்திகள்
10-35 கரப்பந்தாட்ட தொடர்ச்சி
10-55 நிகழ்ச்சிகள் முடிவு

## "பாதிக்கப்படும் மக்களுக்கு கிளிநொச்சி உறைவிடம்"

(கிளிநொச்சி)

''காலத்திற்கு காலம் ஏற்பட்டுவரும் துயரச் சம்பவங்களால் பாதிப்படைந்து பல்வேறு இடங்களிலிருந்தும் பெயர்ந்துவரும் மக்களுக்கு உறைவிடமாக விளங்கும் கிளிநொச்சி பொன்னகரின் அபிவிருத்தியிலும் இங்கு வாழுகின்ற மக்களின் முன்னேற்றத்திலும் கிளிநொச்சி பங்குத்தந்தை வணபிதா. பயஸ்அடிகளார் ஆற்றும்சேவை பாராட்டிற்குரியது''

இவ்வாறு கிளிநொச்சிப் பொன்னகர் கிராம அபிவிருத்திச் சங்க புனரமைப்புக் கூட்டத்தில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய கிளிநொச்சிக் கிராம சேவையாளர் எஸ். தனபாலசிங்கம் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் விசேட சேவை அலுவலர் எஸ். தர்மபாலன் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டார். திரு. தனபாலசிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''பின்தங்கிய பொன்நகரின் முன்னேற்றத்தில் இங்கு வாழுகின்ற மக்களுக்குக் கூடுதல் அக்கறை உள்ளதென்பதற்குப் பெருந்தொகையான கிராமவாசிகள் இங்கு கூடியிருப்பது ஒரு சான்றாகும்.

''இங்கு வாழுகின்ற மக்கள் பேதப்படாமல் ஒன்றுபட்டுக் கிராம அபிவிருத்திக்காகப் பாடுபடவேண்டும்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவானார்கள்.

தலைவர்:- பா. கணேச பிள்ளை, உப-தலைவர்கள்;- எஸ். இராசலிங்கம், கே. பூசாரி, செயலாளர்:- கு. கதிரேசன், உப-செயலாளர்கள்:- செல்வி கோபாலகிருஷ்ணன், செல்வி அனந்தமதி, பொருளாளர்:- இ. இராமச்சந்திரன், செயற்குழு உறுப்பினர்கள்:- கே. சந்திரா, எஸ். விஜயநிர்மலா, சு. இராஜேஸ்வரி, வி. ஆறுமுகம், எம். அன்னவடிவேல், எஸ். மகேந்திரன், பி. வடிவேலு.

## மகிஷாசுர உற்சவம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் வண்ணை அருள்மிகு வீரமாகாளி அம்மன் காவிலில் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் மகிஷாசுர உற்சவம் நடைபெறவுள்ளது. மறுநாள் மானம்பூ உற்சவம் நடைபெறும்.

## சென். ஜோன் அம்புலன்ஸ் தொண்டர்களுக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் சப்பறம், தேர், தீர்த்தம் ஆகிய மூன்று உற்சவ தினங்களிலும் கடமையாற்றிய சென் ஜோன் முதலுதவித் தொண்டர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வுற்சவ தினங்களில் அடியார்களுக்குப் பல்வேறு வழிகளிலும் இவர்கள் சேவையாற்றியதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன், வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் கே. ஆர். மாணிக்கம், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வேலும் மயிலும் ஆகியோர் சென். ஜோன் அம்புலன்ஸ் தொண்டர்களின் பதிவேட்டுப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

''சுமார் ஒரு லட்சம் அடியார்கள் கூடிய இத்தலத்தில் சென். ஜோன் அம்புலன்ஸ் தொண்டர்கள் பொறுப்புணர்வுடனும், சேவைமனப்பான்மையுடனும் உரையாற்றினார்கள் என அப்பதிவேட்டில் மேலும் குறிப்பிட்டனர். (கி)


## மார்க்சிசம் கடைப்பிடிக்கும் பொன்மொழிகள்

மார்க்சிய சித்தாந்தபடி, சோஷலிச அமைப்பு, ஒவ்வொருவரும் தமது ஆற்றலுக்கேற்ப செயல்படவும் அவரவர் வேலைக்கேற்ப ஊதியம் பெறவும் உள்ள அமைப்பு முறையாகும். ஆனால் இன்னும் உயர்ந்த நிலையாகிய கம்யூனிச அமைப்பு, ஒவ்வொருவரும் தமது ஆற்றலுக்கேற்ப செயல்படவும் அவரவர் தேவைக்கேற்ப யாவையும் பெற்றுக்கொள்ளவும் கூடிய ஒரு அமைப்பு முறையாகும்.

இப்பொழுத் திட்டமாக சோஷலிசம் நோக்கி, கம்யூனிசம் நோக்கி வீரநடை போடும் மனிதகுலத்தின் மூன்றிலொரு பகுதியினரால் மார்க்சிசம் கடைபிடிக்கும் இப்பொன்மொழிகள் பூரணமாக நிரூபிக்கப்படுகின்றன.

இவை பற்றி அறிய இலங்கை மார்க்சிய் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும் பழுத்த அனுபவமும் வாய்ந்தவருமான தோழர் த. துரைசிங்கம் எழுதிய

"லெனினும் ஆசியாவும்"

என்ற நூலைப் படியுங்கள்.
இந்நூல் புத்தகசாலைகளில் கிடைக்கும்.

விலை ரூபா 10/-

சோஷலிச ஆய்வுக் கழகம்

31, வில்சன் வீதி, கொழும்பு 12.

(2022)


## திரு. ஜெயவர்த்தன..

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

யமான மாற்றங்களைக் கருத்தில் கொள்ளாது அடியோடு கைவிட நேரிட்டமை அவசிய மற்றதும் துரதிர்ஷ்டவசமானதுமே.

இன்று கொண்டுவந்த தெளிவற்ற மாவட்ட சபை இணைப்புத் திட்டமும் இரண்டாவது சபையும் எவ்வளவு தூரம் ஒரு பல இனம் வாழும் சமூகத்தில் அதிகாரம் சமத்துவ அடிப்படையில் பகிர்ந்து கொள்ள உதவுமென்பது தமிழ் மக்கள் கருத்துப் பரிமாற்றத்துக்கே ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றல்ல.

மத்தியஆட்சியிலும், மாகாண ஆட்சியிலும் தக்க முறையில் தமிழ் மக்கள் பங்கு கொள்ளும் திட்டம் ஒன்று உருவாதற்கு இன்றும் காலம் கடந்து விடவில்லை.

## கடலுக்குச்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி யாழ் பிரஜைகள் குழு ஜனாதிபதி, தேசிய பந்தோப்பஸ்து அமைச்சர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்குப் புகார்செய்துள்ளது.

## முல்லைத்தீவு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தற்கான ஏற்பாட்டை செய்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசாரணைக்காக சுமார் 400 இளைஞர்கள் அழைத்துச் செல்லப்பட்டதாகவும், அவர்களில் 14 பேர் மட்டும் மேல்விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

14 பேர் மட்டும் ஆயுதப் படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் விசாரணையின்பின் அவர்களும் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அவர் கூறினார். (க)

## 20 நாட்களுக்குப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புக்கு சேவைக்கு விட்டார்கள். இந்த இரு பஸ்களிலும் ஆசனங்கள் முழுவதும் நிரம்பியிருந்தன. ஏழு பெண்கள் இந்த பஸ்களில் காணப்பட்டனர். குழந்தைகளும் காணப்பட்டனர்.

யாழ். நவீன மார்க்கட்டிற்கு முன் நேற்று மாலை 6 மணிக்கு இரு பஸ்களுடன் மற்றும் 7 பஸ்கள் நின்றபோது நூற்றுக்கணக்கானோர் வழியனுப்ப வந்து நின்றனர் அச்சமயம் பஸ்ஸின் தொலைக்காட்சியில் 'தமிழ்ப் படம்' ஓடிக்கொண்டிருந்தது. வழியனுப்ப வந்தவர்களும் அதனைப் பார்த்தனர்.

நேற்று முன்தினமிரவு பரீட்சார்த்தமாக வி ஐ. பி. பஸ் ஒன்று இரவு கொழும்புக்கு அனுப்பப்பட்டதாகவும், மற்றொரு தனியார் பஸ்ஸும் சென்றதாகவும் வழியில் எவ்வித தடங்கலும் ஏற்படவில்லையென்றும் பஸ் சேவைப் பொறுப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புசெல்லும் இரவு பஸ்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்துசெல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். யாழ் நகரில் வேறு இரண்டொரு இடத்திலிருந்தும் இரவு பஸ்கள் நேற்றுப் புறப்பட்டன.

பிரயாணி ஒருவரிடம், 'பயப்படவில்லையா?' என்று கேட்டபோது, 'இங்குதான் வீடுகளில் இருக்கும்போது பயமாக இருக்கிறது' என்று சிரித்துக்கொண்டு கூறினார்

மற்றொரு இளைஞரிடம் இரவுப் பயணம்பற்றிக் கேட்டபோது, 'வெளிநாடு செல்வதற்கான ஏற்பாட்டைச்செய்வதற்குப் போகிறேன். அவசரப் பயணம்' என்று கூறினார்.

மற்றொரு வயோதிபரிடம் பஸ் பயணம்பற்றிக் கேட்டபோது, 'ரயிலில்தான் என்ன பாதுகாப்பு? சில தினங்களுக்கு முன் மூவர் ரயிலிலிருநது விழவில்லையா?' என்ற கேள்வியை எழுப்பினார்.

பெண் பிரயாணி ஒருவரிடம் பஸ் பயணத்தைப் பற்றிக் கேட்டபோது, 'பஸ்ஸில்மட்டுமல்ல; எங்கும்தான் அசசம் நிலவுகிறது' என்றார்.

பஸ்கள் ஒன்றன் பின் ஒன்றாகப் புறப்பட்டபோது வீதியோரத்தில் நின்ற உறவினர்கள் கையசைத்து வழியனுப்பி வைத்தார்கள். பஸ்களில் வெளிநாடு செல்லும் சில இளைஞர்களும் சென்றனர். அவர்களை வழியனுப்பவந்த உறவினர்கள் கண் கலங்கினார்கள்; சிலர் அழுதார்கள். [க]

## தொடர்ச்சியான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களும் ஒருநாள் உண்ணாவிரதமிருந்தனர்.

### சுலோக அட்டைகள்

ஆலய முன்றலில் சுலோக அட்டைகள் பலவும் வைக்கப்பட்டிருந்தன. 'மதில் மேல் துவக்கு, மாணவர் நிதமும் தவிப்பு', 'என்று தணியும் இந்த இந்த மாணவர் அச்சம்' 'பொலிஸ் நிலையங்களை அகற்று' 'மாணவர் கல்வி மாமியார் வீட்டிலா' போன்ற சுலோக அட்டைகள் அங்கே வைக்கப்பட்டிருந்தன.

## வீதி வேலைநிறுத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருப்பதாககூறப்படுகிறது.

வீதி வேலைகளுக்காக பல்வேறு பகுதிகளிலும் பறிக்கப்பட்டுள்ள கற்கள், மண் பற்றி இதுவரை எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

கடந்த சில தினங்களாகப் பெய்த மழையினால் பலஇடங்களில் மண் கரைந்துபோய் விட்டதாகவும் கூறப்படுகிறது. (க)

## பார்த்தசாரதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

சுமார் 45 நிமிடங்கள்வரை இப்பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றது. 'இலங்கையில்அண்மைக் காலங்களில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்கள் தொடர்பாகவும் இந்திய இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் அண்மையில் ஐ. நா. சபையில் ஆற்றிய உரைகள் தொடர்பாகவும் இவர்களது பேச்சுக்களில் இடம் பெற்றதாக கூறப்படுகிறது. ஆயினும் இவர்களது பேச்சுக்களின் முழுமையான விபரங்கள் வெளியிடப்படவில்லை.

## நகல் சட்ட...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யத் தாபனம், தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் தூதுக் குழுக்கள் கலந்துகொண்டன.

நேற்றைய மாநாட்டில் ஜனாதிபதியினால் முன்னர் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைக்குத் தூதுக்குழுவினர் தத்தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அமைச்சர் லலித் அங்கு தொடர்ந்து பேசுகையில், ''நவம்பர் 15ம் திகதியைத் தொடர்ந்து அடுத்தநாள் 16ம் திகதியும் மாநாடு நடைபெறும். அப்போது இறுதியாகச் சமர்ப்பிக்கப்படும் நகல் சட்ட அறிக்கை மாநாட்டுப் பிரதிநிதிகள் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டு அவர்கள் அந்த அறிக்கையை ஆராய்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்றார்.

தூதுக் குழுவினர் தெரிவித்த கருத்துக்கள்பற்றி அமைச்சர் குறிப்பிடுகையில். 'தூதுக் குழுவினர் அனைவரும் ஜனாதிபதியின் ஆலோசனை தொர்பாகப் பலதரப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். அவற்றை குறிப்பிட முடியாது விட்டாலும் இனப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற கோரிக்கையையே எல்லாக் குழுக்களும் முக்கியம கவலியுறுத்தியிருந்ததோடு இது தொடர்பாக ஜனாதிபதி எடுக்கும் முயற்சிக்குப் பூரண ஆதரவு தருவதாகவும் குறிப்பிட்டுள்ளன' என்றார்.

முக்கியமாக இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி தெரிவித்திருந்த ஆலோசனைக்கு மாநாட்டுப் பிரதிநிதிகள் தெரிவித்த பல்வேறு கருத்துக்களும் கண்டனங்களும் இறுதி நகல் சட்டமூலம் தயாரிக்கும்போது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்' என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மாநாடு மீண்டும் நவம்பர் மாதம் 15ம் திகதி பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும்.

# செய்திச்சிதறல்

## வாணிவிழா

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்ட இந்துஇளைஞர் பேரவைத் தொண்டர்குழுவும், நல்லூர் திரிசாரணர் குழுவும் இணைந்து நடத்தும் வாணிவிழா எதிர் வரும் 4ம் திகதி வியாழக் கிழமை நடைபெறவிருக்கிறது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி வீ. கே. சிவஞானம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

## சுகாதார ஆலோசனைக்குழு

(யாழ்ப்பாணம்)

சுகாதார ஆலோசனைக்குழு ஒன்று அண்மையில் பளையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இக்குழுவின் தலைவராக திரு சி செல்வராஜாவும், உபதலைவராக திரு. எஸ். பஞ்சலிங்கமும், செயலாளராக செல்வி புஸ்பா ஞானப்பிரகாசமும், பயிற்சி வகுப்புகளுக்கான தொண்டர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கூட்டத்தில் பொதுசுகாதார பரிசோதகர் திரு எம். ஜோசப் குடும்பநலசேவையாளர்செல்வி பி. மார்க்கண்டு ஆகியோரும் உரையாற்றினர்.

## ஒருவருடமாகியும் ஓய்வூதியம் கிடைக்கவில்லையாம்

(புலோலி)

விவசாயத் திணைக்களத்தில் 34 வருடங்கள் சேவையாற்றி 1983ம் ஆண்டு ஜனவரி மாதம் ஓய்வுபெற்ற ஆறுபிள்ளைகளின் தந்தையான விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர் ஒருவருக்கு இதுவரை ஓய்வூதியம் வழங்கப்படவில்லையாம்.

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் 34 வருடங்கள் சேவையாற்றிய கரவெட்டியைச் சேர்ந்த திரு. சிவபாதம் என்ற விவசாய விஸ்தரிப்புச் சேவையாளரே இதுவரை ஓய்வூதியம் வழங்கப்படாமல் பாதிக்கப்பட்டுள்ளவராவர்.

## மக்களிடம் சோரிக்கை

(கொழும்புத்துறை)

பனம் பழங்களை வீணாக்காது பாதுகாத்துப் பெருமளவில் பனாட்டு உற்பத்தியை மேற்கொள்ளுமாறு இலங்கைப் பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பனாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் முகமாகவும் ஊக்குவிக்கும் முகமாகவும் உற்பத்தியாகும் பனாட்டைச் சந்தைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தலைவர் திரு.கே நடராசா தெரிவித்தார்

## தலைவர்

[கல்வியங்காடு]

அரியாலை மேற்கு ஸ்ரீபுவஸ்வரி அம்பாள் ஆலயத்தின் புதிய நிர்வாகத் தலைவராக ஆசிரியர் அருட்கவி திரு. நாகபரமசாமி தெரிவுசெய்யப்பட்டுள்ளார். செயலாளராகத் திரு சி. க, மார்க்கண்டு தெரிவானார்.

## கூடைப்பந்தாட்டம்

(கொழும்புத்துறை)

''கூடைப் பந்தாட்டத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்''

இவ்வாறு யாழ்.வை.எம்.சீ. ஏ. நடத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிப் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி விளையாட்டு உத்தியோகத்தர் திரு. எஸ். தனபாலன் குறிப்பிட்டார்.

## வை. எம். சீ. ஏ. உதவி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு வை. எம். சீ. ஏ. இயக்கம் வீட்டுத்தோட்டச்செய்கையை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் இப்பகுதியிலுள்ள வசதிகுறைந்த 200 குடும்பங்களைத் தெரிவுசெய்து மொத்தம் இரண்டரைலட்சம் ரூபா நிதியுதவியை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது.

## சாம்பியன்

(கொழும்புதுறை)

யாழ். வை. எம்.சீ.ஏ. நடாத்திய வருடாந்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வை. எம். சீ. ஏ. விளையாட்டுக்குழு சாம்பியனாகியது.

இக்கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் யாழ் றிம்மர் விளையாட்டுக் கழகமும், வை. எம்.சீ. ஏ விளையாட்டுக் கோஷ்டியும் மோதிக் கொண்டன.

## 10வீடுகள்

(மன்னார்)

பத்து லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அகத்திமுறிப்பு கிராமோதய சபை பிரிவில் சுயமாக 10 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

## சென். ஜோ ஸ் பழைய மாணவர்

[அரியாலை]

'கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும்.'

இவ்வாறு யாழ் பரி. யோவான் கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்த பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. யே. ரி. செல்லையா பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. சீ. ஈ. ஆனந்தராஜன் கடந்த ஆண்டில் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் குறித்துப் பேசினார். இதனைத்தொடர்ந்து புதிய வருட நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது.

## புதிய நிர்வாகிகள்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்புப் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கிராமசேவை அலுவலர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றபோது தெரிவுசெய்யப்பட்ட புதுவருடநிர்வாகிகள் பின்வருமாறு:-

தலைவர்:- டாக்டர் பாக்கியநாதர் அத்தனுசியார், உப தலைவர்கள்:- திரு. ஏ. வீ. துரையப்பா, திரு. கே. தனராசசிங்கம், செயலாளர் திரு. என். எம். கந்தசாமி, உப செயலாளர்:- திரு. து. சசிகரன், பொருளாளர்:- திரு. ஏ. வி. குலசிங்கம், செயற்குழு உறுப்பினர்களாக ஏழுபேர் தெரிவாகினர்.

## பாம்பு தீண்டி மரணம்

(கிளிநொச்சி)

நித்திரையில் கணவன் பிள்ளைகளுடன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த இளம்மனைவி பாம்பு தீண்டி மரணமானார்.

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் வசித்துவந்த பரமாத்மலிங்கம் செல்வராணி (2 -வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

மரணவிசாரணையை மேற்கொண்ட மரணவிசாரணைஅதிகாரி திரு. மு. யோகலிங்கம் விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கினார்.

## எரிந்த இடங்களைப் பார்த்த ர்

(மன்னார்)

மன்னாரில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டவர்களை இலங்கை ஜமாத்துல் அஸ்ரா இயக்கத்தினர் சந்தித்துத் தமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டனர்.

இவர்கள் மன்னாரில் எரிக்கப்பட்ட கட்டிடங்களையும் வர்த்தக நிலையங்களையும் பார்வையிட்டனர்.

## கல்வி வளர்ச்சிக்குப் பெரும் இழப்பு

(பண்டத்தரிப்பு)

''அமரர் ஏ. கே. சர்மாவின் திடீர் மறைவு வடபகுதி கல்வி வளர்ச்சிக்குப் பெரும் இழப்பாகும்.''

இவ்வாறு வடமாகாணக் கல்லூரி அதிபர்கள் சங்கத்தலைவரும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபருமான திரு. க. அருணாசலம் காரைநகர் ''கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தின்'' அதிபர் திரு. ஏ. கே. சர்மாவின் இறுதிச் சடங்குகள் அவரது வட்டுக்கோட்டையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு இரங்கலுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

வடமாநிலக் கல்வியதிபதி திரு. எம். சிமியாம்பிள்ளை, பிரதம கல்வி அதிகாரி திரு. வி. சபாநாயகம் ஆகியோரும் மற்றும் பெருந்தொகையான கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் இந்த இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

## சுகாதார அத்தியட்சகருக்கு நன்றி

(வண்ணார்பண்ணை)

அரசியல் தலையீடுகளோ, பாரபட்சமோ இல்லாது சேவைக்கு ஏற்பத் தகுதியுடையவர்கள் தெரிவுசெய்யப்பட்டமை குறித்துச் சுகாதாரஅத்தியட்சகருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்றமாதம் நடைபெற்ற ஐந்தாம் தர ஆஸ்பத்திரி ஊழியர்கள் தெரிவின்போது வசதி குறைந்த மக்களும், பின்தங்கிய கிராமப்புற மக்களும் தெரிவு செய்யப்பட்டதைக் குறிப்பிட்டே இந்த நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட சமூக அபிவிருத்திக் கழகம் இந்த நன்றி தெரிவிக்கும் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

## அகில உலக ஜெபவாரம்

(அரியாலை)

அகில உலக ஜெபவாரம் எதிர்வரும் நவம்பர் மாதம் 11-ம் திகதி தொடக்கம் 17-ம் திகதிவரை நடைபெறவிருக்கிறது

யாழ் வை. எம். சீ. ஏ. ஸ்தாபனமும், யாழ். வை. டபிள்யூ. சீ. ஏ. ஸ்தாபனமும் இணைந்து யாழ்ப்பணத்தில் இந்த ஜெபவாரத்தைநடாத்த ஏற்பாடு செய்து வருகின்றன.

## இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—15(01-10-1984)
வாரம்—திங்கள்
திதி—ஸப்தமி இரவு 9-03 வரை
நக்ஷத்திரம்— மூலம் பின் இரவு 5-30 வரை

மேடம்:- புத்திக் கூர்மையுடன் புதியஎண்ணங்கள் தலைதூக்கும் புத்திரர்களாலும் புகழ் கிடைக்கும் இறை நம்பிக்கையுடன் இல்லத்திலும் இனிமைதவழும்.

இடபம்:- நினைத்தது நடக்காது சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும் செய்தொழிலால் நஷ்டம் ஏற்படும் சிலருக்கு நூதனரோகம் தென்படலாம்.

மிதுனம்:- உறவினர் உதவிக்குவருவர் வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும் காதலர்கள்வாழ்வில் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும் குதூகலமானதினம்.

கடகம்:- நண்பர்கள் மூலம் நஷ்டமடைவதற்குஇடமுண்டு எண்ணியகாரியத்தில் ஏமாற்றம் தென்படும் கூட்டுவியாபாரத்தில் மோசடிநடக்கலாம் நன்றாக சிந்தித்த பின் செயலாற்றுக.

சிங்கம்:- தெய்வநம்பிக்கை மேலோங்கிநிற்கும் சிலருக்கு ஆத்மீகவிடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம் பொதுப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பெ துமக்களின் ஆதரவைப் பெறுவீர்.

கன்னி:- தொழில்பகுதியில் புதியவாய்ப்புகள் கிடைக்கலாம் எதிர்பாராத இடத்திலிருந்து அழைப்பிதழ் கிடைப்பதற்கான சந்தர்ப்பமுண்டு சிலருக்கு திடீர் இலாபங்களுக்கும் இடமேற்படமுடியும்.

துலாம்:- வரவில் உயர்வு தென்படும் பெரியவர்களின் வாழ்த்துக்கிடைக்கும் எழுத்தாளர்களுக்குப் புகழ்குவியும் பொதுவாகக் கலைஞர்களுக்கு இன்று சிறப்பானநாள்.

விருச்சிகம்:- துன்பத்தின் ரேகைகள் படரும் எதிலும் தயக்கம் ஏற்படும் ஆதரவு கொடுத்தவரேமுடிவில் கையை விரிக்கக்கூடும் கடன்தொல்லை அதிகரிக்கலாம்.

தனுசு:- வெளியிடத்தொடர்புகளில் மந்தநிலைதென்படும் தொழில்சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம் திடீர்பிரயாணத்துக்கும் இட மூண்டு உடல் நலமும் பாதிக்கக்கூடும்.

மகரம்:- கனிவான நினைவுகள் தலைதூக்கும் காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு இனிதானபேச்சின் மூலம்தனச் சிறப்புக்கும் இடமுண்டு.

கும்பம்:- கடந்தகால எண்ணங்கள் அலைமோதும் அடுத்துக்கெடுப்பதற்கு சிலர் முனைவர் சகோதரவழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கும் இடமுண்டு.

மீனம்:- தாய்வழியால்பெருமைகள்சேரும் எதிரிகள் கூட உங்களை வரவேற்பார்கள் மருத்துவதுறையில் ஈடுபடுபவர்களுக்கு இன்று மகத்தான தினம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ஐ. நா. வில்...

(3ம் பக்க தொடர்ச்சி)

ஐ நா. கட்டடத்தைமுடிவிட்டு செயலில் இறங்கினர் தீவிர சோதனைகளின் பின் அம் மர்மப்பொருள் அல்ஜீரியப் பிரதிநிதிகளின் தஸ்தாவேஜுகள் சில அடங்கிய பெட்டி என்பதைக்கண்டுபிடித்தனர் இதையடுத்து சிலநிமிடங்கள் அங்கு நிலவிய வெடிகுண்டுப் பீதி மறைந்து அலுவல்கள் வழமைக்குத்திரும்பின. (கி)


கடந்த மாத நெஸ்பிறே வெற்றியாளர்கள்
தனா ரூ.5000/= பரிசு

| | | |
|---|---|---|
| பி. எச். ஹறாநாயக்க, தபால் நிலையம், மாத்தறை | ஜெயபிரகாஷ், 16, திருமால் வீதி, திருகோணமலை. | திருமதி. நிரோஷா விஜேவர்தன 19/10, சிறைச்சாலை வீதி, ருகம |
| தயா மல்லிகா லியனகே க்வரவில அரச தோட்டம், சாமிமலை. | தர்ஷண கலும், ஈ/1/1, கம்கருபுர மாடி வீடு, ஸ்ரேஸ் வீதி, கொழும்பு-14. | செல்வி. ஹிரந்தி சிவலிங்கம், பொலிஸ் நிலயத்திற்கு அருகே, பொலிஸ் நிலைய ஒழுங்கை, சாவகச்சேரி |
| ரி. ஹயசிந் பெரேரா, 192, பாத்தியா மாவத்தை, கிரிபத்கொடை, களனி, | எல். இரந்தி பீரிஸ, 'இரந்தி' ஸ்டேஷ்ன் றேட், அளுத்கம, | சானக ரேஷான் அபேரத்ன, 29, மிஷன் லேன், பிற்றகோட்டே, கோட்டே |
| எம். ஜாவிட் இல்திஸாம், ''சுரையா மான்ஸில்'' 46/1, கைலகொடை வீதி, பதுளை. | எச். எம். லிலானி ஹேரத், 622/12, கொடகே மாவத்தை, 2ஆம் முடக்கு, அனுராதபுரம், | ஐ. எம். ஆர். பியதிலக, அமுனகொலே, பொல்பித்திகம, |




பரிசு பெறுவோரின் பெயர்கள் வாராவாரம் இந்நிகழ்ச்சியில் அறிவிக்கப்படும்.

நீங்களும் வெற்றி பெறலாம்

★ நெஸ்பிறே பக்கெட்டின் பின்புறம் பாருங்கள்.
★ நெஸ்பிறே அருந்துவோரின் நாட்டைத் தெரிவுசெய்யுங்கள்
★ விடைக்கூண்டையும் கூப்பனையும் நிரப்புங்கள்
★ த பெ. இல. 1119, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்புங்கள்
★ நீங்கள் மீண்டும் மீண்டும் பரிசுபெறலாம்.




விலை ரூபா 27/90.

நெஸ்பிறே
வளரும் பிள்ளைகளுக்கு நெஸ்லே வழங்கும் பால்

Grant K & E 5608

**ராஜா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-00 4-30
6-45

Every lovers should
see this film!
Willie games......
Phoebe crates
PARADISE
(Color) strictly for adults)
கண்டிப்பாக 17 வயதுக்
குட்பட்டவர்கள் அனு
மதிக்கப்படமாட்டார்கள்

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
THE BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00,
சிவாஜி-சாரதா-
சுந்தரராஜன்
நடித்த
**ஞான ஒளி**
இந்தியாவிலிருந்து பிரத்
தியேகமாக பெறப்பட்ட
புதிய கொப்பி

**வின்ஸர்** [யாழ்.]
தினசரி 10-30, 2-30, 4-30
7-00
புரூஸ் லீ யின்
வாழ்க்கையில் சரித்
திர முக்கியத்துவம்
வாய்ந்த
"BIG BOSS"
தொடக்கம் முதல்
முடிவு வரை நாடி
துடிக்கும் உள்ளத்தில்
ஒரு கிளுகிளுப்பை
ஊட்டும் விறுவிறுப்
பான கராட்டி சண்டை
கள் நிறைந்த காட்சி
கள்.
காலஞ்சென்ற புரூஸ்
லியைக் கடைசி முறை
யாகப் பார்க்கும் சந்
தர்ப்பத்தை இழக்கா
தீர்கள்.
புத்தம் புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ரவிச்சந்திரன்—லட்சுமி
**அக்கரைப்பச்சை**

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரஜனிகாந்த்
சௌகார்ஜானகி **நீ**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
ஸ்ரீநாத், ராஜீவ், ஜோதி
**ரயில் பயணங்களில்**
(ஈஸ்ட்மன் கலரி)
இந்தியாவிலிருந்து தரு
விக்கப்பட்ட புதிய பிரதி

**சாந்தி** (யாழ்நகர்)
28—30
10-30, 2-30, 4-45
மட்டும்
Sean Conery **CUBA**
(Action-Packed-Color)

**ராணி** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30,
சிவாஜி - ஜெயலலிதா
**பட்டிக்காடா பட்டணமா**

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர் - ராதிகா
நாகேஷ்
மறைந்த டிங்கிரி
கனகரெட்ணம்-
எஸ். தர்மலிங்கம்
**ரத்தத்தின் ரத்தமே**
(புதியபிரதி - ஈஸ்மன்கலர்)

## ஈர நெஞ்சினர் ஏ.கே. சர்மா

கடமையின் சின்னமாக, உயர்தர கல்லூரிகளின் கண்ணியமான அதிபராக, கல்விக் கடலின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த ஏ. கே. சர்மா வட்டுக்கோட்டையில் இருந்து காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மகாவித்தியாலயத்திற்கு உள்ளே நுழையும் சமயத்தில் மாரடைப்பு நோயால் பாதிக்கப்பட்டுத் திடீரென விண்ணுலகெய்திய செய்தி, நினைத்துப் பார்க்கக் கூட முடியாத அளவு சோகமானதொன்றாகும்.

கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் சூழ்ந்து கொண்டு செய்வதறியாது திகைத்த நிலையில் அலறியழுத காட்சி அனைவரையும் கவலைக் கடலில் மூழ்கடித்துவிட்டது.

புன்னகை தவழும் இன்முகத்தோடு காட்சிக்கெளியராய், மாணவருக்குக் கடுந் தண்டனை வழங்க விரும்பாது புத்திமதி கூறி அவர்களை நல்வழிப்படுத்திய நல்லாசிரியனாய், ஆசிரியர்கள் அனைவரையும் அன்பினால் பிணைத்து அன்னாரின் பூரண ஒத்துழைப்போடு கல்லூரியை வழிநடத்திய கல்விநிர்வாக சேவை அதிபராய், சீரிய ஒழுக்கமும், தெய்வபக்தியும், பிறர் நலம் பேணும் பெற்றியும் ஒருங்கே யமைந்த குணக்குன்றாய் விளங்கியவர் என்பதில் மிகையேதுமில்லை.

கொழும்பு றோயல் கல்லூரியில் உப அதிபராகப் பல்லாண்டுகள் பணியாற்றிய சர்மா, சுகவீனங்காரணமாகச் சொந்த ஊருக்கு வந்து தமது பழைய கல்லூரியாகிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கடமையாற்றி, அங்கிருந்து பதவியுயர்வுடன் அதிபராக நியமிக்கப்பட்டார். விஞ்ஞானக் கல்வியைத் தாய்

(8ம் பக்கம் பார்க்க)

**எங்கள் இன்றைய வெளியீடு**

★ தியாகராஜன், சரிதா நடித்த
"கொம்பேறி மூக்கன்"
(VENUS ORIGINAL)
★ விக்ரம், ரதிதேவி, விஜி நடித்த
"ஒண்ணும் தெரியாத பாப்பா"
(THOMSUN ORIGINAL)

மலிவான விலைகளில் தரம் வாய்ந்த படப் பிரதிகளை என்றென்றும் பார்த்து மகிழ நாடுங்கள்.

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 (2034)

## காணவில்லை



எனது வீட்டில் என்னுடன் உதவிக்கு இருந்த மோகன் என்பவரை கடந்த இரண்டு வாரங்களாகக் காணவில்லை. பொதுநிறம் உயரம் 3 அடி வெள்ளை காற்சட்டை அணிந்திருந்தார். இவரை கண்டதும் என்னுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். திருமதி மா. சண்முகம், தொட்டிலடி, சங்கானை. 2070

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையின் கேள்வி அறிவித்தல் — 1984

கீழே குறிப்பிடும் கடைகளுக்கு சீல் வைத்த கேள்விகள் 12-10-1984-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை கீழ்க்குறிப்பிடும் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டு என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களும், தேவையான விபரங்களும் அந்தந்த உப அலுவலகத்தில் 11-10-84 ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

| விபரம் | கடைகளின் எண்ணிக்கை | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வி ஒவ்வோர் கடைக்கும் | கேள்வி வைப்பு | கேள்வி பத்திர பணம் |
|---|---|---|---|---|
| **1. சுன்னாகம் பட்டினம்** | | | | |
| மேல்மாடி முழுவதும் (காங்கேசன்துறை வீதி) | | 75000/- | 250/- | 25/- |
| மத்திய சந்தைக்கடை இல. 50 | 1 | 25000/- | 250/- | 25/- |
| மத்திய மாட்டிறைச்சிக்கடை (31-12-84 வரை) | 1 | 40000/- | 250/- | 25/- |
| மத்திய ஆட்டிறைச்சிக்கடை (31-12-84 வரை) | 1 | 4000/- | 100/- | 25/- |
| **2. பண்டத்தரிப்பு பட்டினம்** | | | | |
| நவீன சந்தை வெளிப்புறக்கடை (இல. 1, 2) | 2 | 20000/- | 250/- | 25/- |
| **3. நயினாதீவு உப அலுவலகம்** | | | | |
| சந்தைக்கடை | 3 | 250/- | 100/- | 10/- |
| **4. நெல்லியடி உப அலுவலகம்** | | | | |
| இராஜகிராமக் கடைகள் | 2 | 500/- | 100/- | 10/- |
| **5. அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| சந்தைக்கடை | 1 | 3000/- | 100/- | 10/- |
| **6. காங்கேசன்துறை உப அலுவலகம்** | | | | |
| சந்தைகக்கடைகள் | 4 | 3000/- | 100/- | 10/- |


செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை.

யாழ். அபிவிருத்தி சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1984-09-20.

பிரதி: அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், யா அ ச உப அலுவலகம், சுன்னாகம் / பண்டத்தரிப்பு பட்டணம் / நெல்லியடி / நயினாதீவு / அச்சுவேலி / காங்கேசன்துறை. —தேவையான நிபந்தனைகளுடன் கேள்வி விளம்பரம் தயாரித்து அதிக விளம்பரம் செய்யவும். கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட இறுதி நாள் அன்றே விநியோகிக்கப்பட்ட கேள்விப்பத்திரத்தின் விபரம் அறியத்தரவும். (1936)

## 31வது நாள் நினைவஞ்சலி
### திருமதி செல்லாச்சிப்பிள்ளை பரமலிங்கம்

மலர்வு: 07 - 01 - 1907 உதிர்வு: 01 - 09 - 1984



எங்கள் இல்லத்தில் அணையாத தீபமாக ஒளி வீசிய அன்புத் தெய்வமே! உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.


**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பழைய கோட்டை,
கோப்பாய் வடக்கு.

19/3

## ஓராண்டு நினைவஞ்சலி
### அமரர் மகேஸ்வரன் மயில்வாகனம்
(இளைப்பாறிய பொறியியலாளரும் அகில இலங்கை சமாதான நீதவானும்)

மலர்வு: 29 - 07 - 1916 உதிர்வு: 12 - 10 - 1983



ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட பாசப் பிணைப்பே! உங்கள் பிரிவால் உளம் உருகும் அன்பு மனைவி, மனம் கலங்கி ஏங்கும் அன்புப் பிள்ளைகள், உமது பிரிவால் வாடும் சகோதரர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,
அன்புமனைவி, அருமைப்பிள்ளைகள், அன்புச்சகோதரர்கள்
"அன்னவாசா" கைதடி ? நுணாவில், சாவகச்சேரி.
2023

## வை. எம். சி. ஏ. தாக்குதல்:
# அசம்பாவித சம்பவங்களுக்கு மன்னிப்புக் கேட்டுப் பிரசுரம்!

(யாழ்ப்பாணம்)

யாழ் வை. எம். சி ஏ. ஸ்தாபனத்திற்கு இம்மாதம் 27-ம் திகதி நடந்த அசம்பாவிதங்களுக்காக, சம்பவத்திற்குக்காரணகர்த்தாக்கள் என்று தங்களைக் கூறுவோர் துண்டுப் பிரசுரம் மூலம் மண்ணிப்புக் கோரியுள்ளனர்.

'சம்பவத்தில் ஈடுபட்டோர்' நேற்று வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் ''மிகவும் மதி மயங்கிய நிலையில் எம்மால் ஏற்பட்ட துர்ப்பாக்கியமான செயலுக்கு மிகவும் வருந்தி பகிரங்க மன்னிப்பு கோருகின்ேறும்'' என்று தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தனிப்பட்ட குரோதத்தினலோ, திட்டமிட்டோ செயல்படவில்லையென்றும், பிறந்ததினக் கொண்டாட்டமொன்றில் பங்குபற்றித் திரும்பியபோது மதுமயககத்தில் தற்செயலாக ஏற்பட்ட துர்ப்பாக்கியமான சம்பவமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்தாபனத்திற்கு அதற்குரிய நஷ்டஈட்டுத்தொகையினைச் செலுத்துவதோடு இனிமேல் இவ்வாறன துர்ப்பாக்கியச் சம்பவங்கள் ஏற்படமாட்டதென்பதையும், உறுதியாகக் கூறுகின்ேறும்' என்றும் துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது. (க)

# பழைய மாணவர் நடத்தும் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை ஊர்வலமாகச் சென்று யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கவிருக்கிறர்கள்.

பருத்தித்துறைக் ஹாட்லிக் கல்லூரிக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றுமாறு கோரும் மகஜரையே இவர்கள் கையளிக்கவிருக்கிறர்கள். (க)

# இப்படியும் நடக்கிறது

இம்மாதம் இருபத்துஐந்தாம்திகதி நடைபெறவிருக்கும் மின்னேரியா, குண்டசாலை இடைத்தேர்தல்கள், இலங்கைச் சரித்திரத்திலேயே பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது!

முதலாவது காரணம்: மின்னேரியாத் தொகுதியில் போட்டியிடுவோர் தொகை ஐம்பத்து ஒன்று குண்டசாலை முப்பத்து ஒன்பது.

இரண்டாவது: வாக்குச்சீட்டின் நீளம்! குண்டசாலை இரண்டரை அடி. மின்னேரியா மூன்று அடி. அதாவது ஒருயார்!

மூன்ருவது: சின்னங்கள்!

தேர்தல்கள், கிரிக்கெட்போட்டி மாதிரித்தான். எல்லாம் எப்படியும் நடக்கும்.

★ ★ ★

மின்னுமல் முழங்காமல் மழைவருவது இப்போது புதிதல்ல. ஆனல் முன்னறிவித்தல்கள் பெரியவிளம்பரங்கள் இல்லாமல், ஒரு இனிமையான மாலை நிகழ்ச்சி நடப்பதென்ருல், அதுவும் யாழ் நகரில் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறுவதென்ருல்........?

யாழ். நகரிலுள்ள ஒருதனியார் கல்வி நிறுவனம், நேற்றுப்பிற்பகல் மூன்றுமணிமுதல் மாலை ஐந்தரை மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கலைநிகழ்ச்சியொன்றை அளித்தது. நோக்கம்: குறிப்பிட்ட நிறுவனத்தில் நூலகமொன்றை அமைப்பது.

சின்னஞ்சிறுசுகளின் பலதரப்பட்ட அற்புதமான நிகழ்ச்சிகள் சபையோரை மெய்மறக்கச் செய்த அதேநேரத்தில், பார்வையாளர்களாகக் கலந்துகொண்ட சிலருக்கு ஒரு சந்தேகத்தையும் ஏற்படுத்தியது.

அந்தச்சந்தேகம்: நாம் இருப்பது யாழ். நகரிலா? மாலைநேரமா?

— ஊடுருவி

# கல்வி அமைச்சரின் வெளிநாட்டு விஜயங்கள்
### சபையில் பிரஸ்தாபம்

[கொழும்பு]

கல்வி அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்க கடந்த 77 ஆம் ஆண்டு ஜூலை முதல் 83-ம் ஆண்டு ஜூன் வரை ஐந்துதடவைகள் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இவ் வெளிநாட்டுப் பயணங்களுக்கு வைத்தியசெலவு தவிர 4 லட்சத்து 34 ஆயிரத்து 954 ரூபா வெளிநாட்டுசெலாவணி செலவளிக்கப்பட்டுள்ளது. மத்துகம எம். பி. திரு அனில் முனசிங்காவின் கேள்வி ஒன்றுக்கு சபையில் மேலும் பதில் அளிக்கையில் கூறியதாவது:-

கல்வி அமைச்சர் சில அதிகாரிகள் சகிதம் சுவிட்ஸர்லாந்து, யூகோஸ்லாவியா, மேற்கு ஜெர்மனி. கிழக்கு ஜெர்மனி, ஆஸ்திரியா, இங்கிலாந்து, மாலைதீவு, பிரான்ஸ், அமெரிக்கா ஆகியநாடுகளுக்கு விஜயம் செய்திருக்கிறர். ஆகக் கூடுதலாக இங்கிலாந்தில் 28 நாட்களும், அமெரிக்காவில் 23 நாட்களும் தங்கியிருக்கிறர்.

### ஈரநெஞ்சினர்...
(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழிக்கு மாற்றிய காலத்தில் தமிழ் மொழியில் பல விஞ்ஞான நூல்களை எழுதித் தக்க சமயத்தில் தமிழ் மாணவர்களுக்கு உதவிய பெருமகன் அதிபர் ஏ. கே. சர்மா அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று பரம்பொருளைப் பிரார்த்திப்போம்

வித்துவான்
மு. சபாரத்தினம்

# இவர்களுக்கு திடீர் இடமாற்றம்!

(காரைநகர்)

காரைநகர் சீ-நோர் தொழிற்சாலையில் கடமையாற்றிவந்த ஐந்து ஊழியர்களுக்கும், குருநகர் வலைத் தொழிற்சாலையில் கடமையாற்றிய சில ஊழியர்களுக்கும் கொழும்பு, மட்டக்குளிக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சீ-நோர் ஊழியர்கள் மத்தியில் பதற்றநிலையும், பெரும் பரபரப்பும் காணப்படுகிறது. இந்நிறுவனத்தின் மேலதிகாரி யொருவரும் இடமாற்றத்திற்குள்ளாகலாமென கூறப்படுகிறது.

காரைநகர்சீ-நோரில் கடந்த மாதம் 23ம் திகதி இரவு கொள்ளையடிக்கப்பட்ட 36,000 ரூபாவில் ஒருபகுதி இந்த மேலதிகாரியிடமிருந்து அறவிடப்படலாமெனக் கூறப்படுகிறது.

# இந்தியாவில் ஜனதிபதி ஆட்சிமுறை வேண்டும்!
### மத்திய அமைச்சர் கருத்து

புதுடில்லி, செப். 30

''இந்தியாவில் ஜனதிபதி ஆட்சி முறை வரவேண்டும். இந்திரா காந்தி இந்தியாவின் ஜனதிபதியாக ஆக வேண்டும். அப்போதுதான் இந்தியா உருப்படும்'?

இவ்வாறு இந்திய பெற்றோலிய அமைச்சர் திரு வசந்த சாத்தேஸ விருந்து வைபவமொன்றில் தெரிவித்தார்.

இவர் உண்மையில் இந்திரா ஏன் ஜனதிபதியாக வரவேண்டும், இந்தியாவில் ஜனதிபதி ஆட்சிமுறை ஏன்வரவேண்டும் என்று நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

இவர் தமது உரையில் 'ஜனதிபதி ஆட்சிமுறை எமக்கு அவசியம், இந்திரா முழு அதிகாரங்களுடன் இந்தியாவின் ஜனதிபதியாக வேண்டும்' என்ருர். (கெ)

### இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐ வி. சங்க எரிந்த இடிபாடுகளுக்குள் கண்டெடுத்த எலும்புத் துண்டுகள் தொடர்பான விசாரணையாழ். நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் இன்று நடைபெறும். (க)

### இரவில்வரும் 'ரீங்காரம்'

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் மழையைத் தொடர்ந்துநுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது.

நகரில் சில இடங்களில் வாய்க்காலும் சுத்தம் செய்யப்படாமல் இருப்பதனுலேயே நுளம்பு உற்பத்தி அதிகரித்து இருப்பதாகவும் வீதிகளிலும், சில இடங்களில் நீர் தேங்கி இருப்பதால், நுளம்பு அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (க)

### புலோலி ப. நோ. கூ. சங்க
# கிராமிய வங்கி ஊடாக ஓய்வூதியம்

(புலோலி)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுக் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கைகள் கடந்த மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 9 பேருக்கு ஓய்வூதியம் இக்கிராமிய வங்கியினூடாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் சுமார் 150 பேர் இக்கிராமிய வங்கியினூடாக ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளுமுகமாக வங்கியில் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்துள்ளனர்,

இம்மாதம் இக் கிராமிய வங்கியினூடாக சுமார் 175 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுமென கிராமிய வங்கி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# கொள்ளை முயற்சி தோல்வி!

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ப நோ. கூ. சங்கக கிளையில் நேற்றுமுன்தினம் நடந்த கொள்ளை முயற்சி, சங்க ஊழியரின் கடும் எதிர்ப்பினல் தோல்வியில் முடிந்தது

நேற்றுமுன்தினம் காலை வாகனமொன்றில் 6 இளைஞர்கள் துப்பாக்கியுடன் வந்து சங்கக் கிளையில் கொள்ளையடிக்க முயற்சித்தபோது ஊழியர் பலமாகச் சத்தமிடவே, அயலவர்கள் கூடியதாகவும், வந்தவர்சள் வாகனத்தில் ஏறிச்சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது. [க]

### இராணுவம்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மல்ல. இதனைத் திடீரென்று செய்யமுடியாது என்ருர்.

இந்த விசேட பொலிஸ் படையினர் தற்போதய பொலிஸ் படையிலிருந்தே தெரிவுசெய்யப்படுவார்கள். இவர்களுக்கு குறிப்பிட்ட பகுதியின் மொழியில் பூரண தேர்ச்சி அளிக்கப்படும். இதனுல் இப்பகுதி மக்களுடன் நெருங்கிப் பழகி அவர்களின் குறைபாடுகளை அறியமுடியுமென்ருர்

வடபகுதியில் தற்போது அசப்பாவிதங்கள் குறைந்துவிட்டன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# வெடிபொருட்களுடன் ஐரிஷ் கொரிலாக்களின் படகு!

பெல்பாஸ்ட், செப். 30

அயர்லாந்துக் கடற்படையினர் வெடி பொருட்களுடன் சிறிய படகொன்றைக் கைப்பற்றியுள்ளனர்.

இப்படகில் பெருந்தொகையான வெடிமருந்துகள், துப்பாக்கிகள் என்பன இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

வட அயர்லாந்தின், ஐரிஷ் குடியரசுஇராணுவ(ஐ ஆர் ஏ) கெரில்லாக்களுக்கென்றே இவ் வெடிபொருட்கள் ஏற்றிவரப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகின்றது.

இவ்வெடிபொருட்களை அமெரிக்காவிலிருந்தே ஐரிஷ் கெரில்லாக்கள் கடத்திவந்துள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது.

இப்படகில் காணப்பட்ட வெடிபொருட்கள் சம்பந்தமாக தீவிரபுலன் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

### மீண்டும் இ. காங்கிரஸ்

சென்னை, செப் 30

தமிழக சட்ட சபையில் தி. மு. க எதிர்க் கட்சியாக வரும் சந்தர்ப்பத்தை மீண்டும் இழந்துள்ளது

இந்திரா காங்கிரஸ்எம் எல் ஏ திரு. விஜயரகுதை தொண்டமான் காலமானதால், தி. மு. க வுக்கும் இந்திரா காங்ரசுக்கும் சம பலமே இருந்தது.

தற்போது காமராஜ் காங்கிரஸ் கட்சியின் எம்.எல் ஏ, திருமதி பொன்னம்மாள் இந்திரா காங்கிரஸில் இணைந்து கொண்டதை அடுத்து மீண்டும் இந்திராகாங்கிரஸ் தமிழக எதிர்க்கட்சியாக மாறியுள்ளது,

## மரண அறிவித்தல்
### திருமதி. செ. சிவபாக்கியம்

சித்தன்கேணியைச் சேர்ந்த சிவபாக்கியம் (வேவி) காலமானுர் இவர் செல்லத்துரையின் (இளைப்பாறிய பிரதம சிருப்பர் இலங்கை சேமிப்புவங்கி] அன்பு மனைவியும். நாகரூபி, நாகேந்திரா (ஜெர்மனி) ரவீந்திரா (T.A) நீர்வழங்கல்த்திட்டம் கிளிநொச்சி, ஆகியோரின் அன்புத்தாயாரும். அருமைத்தவராஜா. (கணக்காளர் விக்ரோறியாத் திட்டம்) யோகேஸ்வரி, புஸ்பராணியின் மாமியாரும் பிரசாந் பிரபாந்தினி, ஜானகி, ரதீப், ரதீபாவின் பேத்தியுமாவார். அன்னரின் ஈமைக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (1-10-84) 12 மணியளவில் சங்கானை கரச்சி மயானத்தில் நடைபெறும். 2039

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu Telephone 22389 - 24126.